பக்கங்கள்: பத்து

Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:14 வள்ளுவர் ஆண்டு 2030 ஆனி 17 வியாழக்கிழமை [01-07-1999] UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 186

30 வள்ளங்களில்

விடத்தல்தீவில் இருந்து 388பேர் மன்னார்வந்தனர்

மன்னார், ஜூலை 1

விடத்தல்தீவில் இருந்து 30 வள்ளங்களில் வெள்ளைக் கொடிகளை ஏந்தியவாறு 93 குடும்பங்களைச் சேர்ந்த 388 பேர் மன்னாருக்கு நேற்று வந்துசேர்ந்தனர்.

மன்னார் அரச அதிபரினால் பொறுப்பேற்கப் பட்ட இவர்களில் 11 குடும்பங்களைச் சேர்ந்த 52 பேர் பேசாலை அகதிமுகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

ஏனையோர் நண்பர்கள், உறவினர்கள் வீடுகளுக்குச் சென்றுள்ளனர்.

விடத்தல்தீவில் உள்ள தேவாலயங்களில் தாம் தங்கியிருந்ததாகவும்—

(10 ஆம் பக்கம் பார்க்க)

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிக்கு புதிய பாதை ஒன்றைத் திறக்க முயற்சி

பலகல்லவுடன் வவுனியா அரச அதிபர் பேச்சு

வவுனியா, ஜூலை 1

இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதிக்கு ஸ்தம்பித்துள்ள போக்குவரத்தைச் சீராக்க புதிய பாதை ஒன்றைத் திறக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வவுனியா அரச அதிபர் கே. கணேஷ் இது தொடர்பாக வன்னிப் படைகளின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் லயனல் பலகல்லவுடன் கலந்துரையாடியுள்ளார்.

வவுனியா — மாங்குளம் பாதையை அல்லது பூவரசங்குளம் — இரணை இலுப்பைக்குளம் — மூன்று முறிப்பு — துணுக்காய் ஊடான பாதையை அல்லது வவுனியா — ஒட்டுசுட்டான் — புதுக்குடியிருப்பு ஊடான பாதையைத் திறக்க படையினர் தயாராகவிருக்கின்றனர் என்று பலகல்ல அரச அதிபரிடம்

(10 ஆம் பக்கம் பார்க்க)

இராணுவ வாகனம் சேதம்

கொழும்பு, ஜூலை 1

ஒட்டுசுட்டான் பகுதியில் விடுதலைப் புலிகளின் கிளைமோர் தாக்குதலில் சிக்கி படையினரின் இராணுவ வாகனம் ஒன்று சேதத்துக்குள்ளானது என்றுபாதுகாப்பு அமைச்சு நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இந்தத் தாக்குதலில் படையினருக்கு சேதம் எதுவும் ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-3-6)

புளொட் எம்.பியின் வீடு மீது வவுனியாவில் தாக்குதல்!

நேற்று இரவு சம்பவம் பொலீஸ், ஊர்காவலர்பலி

வவுனியா, ஜூலை 1

வன்னி மாவட்ட புளொட் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். பாலச்சந்திரனின் வவுனியா வாசஸ்தலம் நேற்றிரவு 9.50 மணிக்கு இனந்தெரியாதவர்களின் தாக்குதலுக்குள்ளானது.

அங்கு காவலுக்கு இருந்த றிசேர்வ் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவரும் ஊர்காவலர் ஒருவரும் கொல்லப்பட்டனர்.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

வவுனியா பண்டாரிக்குளத்தில் அமைந்துள்ள பாலச்சந்திரனின் வீட்டை நோக்கி இனந்தெரியாதோர் சரமாரியாகத் துப்பாக்கி

[10ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்திமூலை

அப்ப கண்டி வீதி மறந்து போச்சுப் போல...!

மருத்துவர் சங்கப் பிரதிநிதிகளுடன் பேச்சுநடத்த ஜனாதிபதி இணக்கம்

நாளை அலரிமாளிகையில் சந்திப்பு

கொழும்பு, ஜூலை 1

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள அரச மருத்துவர் சங்கப் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்த ஜனாதிபதி நேரம் ஒதுக்கிக்கொடுத்துள்ளார்.

அரச மருத்துவர்களின் வேலை நிறுத்தத்துக்கு ஆதரவாக 26 தொழிற்சங்கங்களும் வேலைநிறுத்தத்தில் குதிக்கப்போவதாக மிரட்டல் விடுத்த நிலையில் ஜனாதிபதி இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.

நாளை வெள்ளிக்கிழமை நண்பகல் 12. 45 மணிக்கு அலரிமாளிகையில் சந்தித்துப் பேசமுடியும் என்று அரச மருத்துவர் சங்கத்தின் தலைவருக்கு ஜனாதிபதி கடிதம் அனுப்பியுள்ளார்.

இந்தச் சந்திப்புக்கு முன்

(10ஆம் பக்கம் பார்க்க)

தமிழர் ஆசிரியர் சங்க சுகவீன லீவு போராட்டம் 2வாரங்கள் ஒத்திவைப்பு

மேலதிக செயலருடன் நேற்று பேச்சுவார்த்தை

கொழும்பு, ஜூலை 1

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் தமிழர் ஆசிரியர் சங்க ஏற்பாட்டில் நாளை நடைபெறவிருந்த சுகவீன லீவுப் போராட்டம் இரு வாரங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கல்வி, உயர்கல்வி அமைச்சு மேலதிக செயலாளர் உபசேனசேனநாயக்கவுடன் நேற்று மாலை நடத்தியபேச்சுக்களை அடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்று சங்கத்தின் பொதுச் செயலாளர் த. மகாசிவம் நேற்றிரவு தெரிவித்தார்,

எமது சங்கம் முன்வைத்துள்ள ஒன்பது கோரிக்கைகள் தொடர்பாக கல்வி உயர்

(10 ஆம் பக்கம் பார்க்க)

கூட்டணி அலுவலகப் பகுதியில் நடமாடியதாக மூவர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 1

தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ். மாவட்ட அலுவலகப் பகுதியில் நடமாடியதாகத் தெரிவித்து மூன்று இளைஞர்களைச் சந்தேகத்தின் பேரில் பொலீஸார் கைதுசெய்துள்ளனர்.

பாக்கியநாதன் விஷ்ணுகாந்தன், பூலோகசுந்தரம் செல்வகணேஷ், குலேந்திரன் கௌரிதரன் ஆகியோரே கைது செய்யப்பட்டவர்களாவர்.

இவர்கள் யாழ். நீதிமன்றதில் நீதிவான் கே. கேசவன் முன்னிலையில் பொலீஸாரால் ஆஜர் செய்யப்பட்டனர்.

இவர்களைப் பிணையில் செல்ல அனுமதித்த நீதிவான் எதிர்வரும் 6 ஆம் திகதி மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜராக உத்தரவிட்டார். (இ-3-5-9)

பொது வைபவங்களில் பங்குபற்றவேண்டாம்!

கிழக்கு எம். பிக்களுக்கு அறிவுறுத்து

மட்டக்களப்பு, ஜூலை 1

மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த சகல நாடாளுமன்ற உறுப்பினர்களையும் பொதுவைபவங்களில் பங்குபற்ற வேண்டாம் என்று விடுதலைப் புலிகள் அறிவுறுத்தியுள்ளனர் என்று தெரிய வந்தது.

இது தொடர்பாக அந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தகவல் அனுப்பியுள்ள விடுதலைப் புலிகள், நாடாளுமன்ற உறுப்பினர் என்ற கோதாவில் பொது மக்களுடனான சந்திப்புக்களை நிறுத்த வேண்டும் என்றும் கோரியுள்ளனர்.

இதனை அடுத்து மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்சமயம் தங்கியுள்ள நாடா

(10 ஆம் பக்கம் பார்க்க)

'லங்கா முடித்த' கப்பல் மூலம் 1,000 பயணிகள் திருமலைக்கு

சனி, ஞாயிறு ரிக்கெட்

யாழ்ப்பாணம், ஜூலை 1

காங்கேசன்துறையில் இருந்து திருகோணமலைக்கு ''லங்கா முடித்த'' கப்பல் மூலம் ஆயிரம் பயணிகளை அடுத்த வாரம் அழைத்துச் செல்ல ஏற்பாடாகியுள்ளது என்று யாழ். சிவில் நிர்வாக அலுவலக அதிகாரி தெரிவித்தார்.

இந்தக் கப்பலில் பயணம் செய்ய விரும்புபவர்களுக்கான ரிக்கெட்டுக்கள் எதிர்வரும் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் நண்பகல் 12 மணி முதல் மாலை 5 மணி வரை வழங்கப்படவிருக்கின்றன.

தூர இடங்களைச்சேர்ந்தவர்களுக்கு சனிக்கிழமையும்—

யாழ்ப்பாணம், நல்லூர் பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கு ஞாயிற்றுக்கிழமையும்—ரிக்கெட் வழங்கப்படும். [இ-3]

இளைய தலைமுறையின் இதயம் கவர் நம் இன்றைய நாளிதழ்

8ஆம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 1935 — 02 — 25

மறைவு 1991 — 06 — 30

அமரர்

வேலாயுதம்பிள்ளை செல்வரத்தினம்

(பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம்)

பாசத்தின் உறைவிடமாய், இருந்து எம்மை விட்டுப் பிரிந்து இறைவனடி எய்திய எங்கள் அன்புத் தெய்வமே!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை நாளும் பிரார்த்திக்கின்றோம்.

—குடும்பத்தினர்.

ஸ்ரேசனடி,
எழுதுமட்டுவாழ். [சி/3044]

பிற்போடப்பட்டுள்ளது

கொக்குவில் இந்துக் கல்லூரி

தமிழ்த்தின விழா

இன்று கல்லூரியில் நடைபெறவிருந்த தமிழ்த்தின விழா தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது என்பதை சகலருக்கும் அறியத் தருகிறோம்

(67076) — அதிபர்

கண்ணீர் அஞ்சலி

வலிகாமம் மேற்கு பிரதேச சபையில் தொழில்நுட்ப உத்தியோகத்தராகக் கடமையாற்றும்

திரு. க. வரதராசா

அவர்களின் அன்புத் தாயார்

திருமதி மாரிமுத்து கதிரேசு

அவர்களின் மறைவையிட்டு துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

தலைவரும் உத்தியோகத்தர்களும்
வலிகாமம் மேற்கு பிரதேச சபை.

(சி/8060)

31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மண்ணில்: 27 — 10 — 1920

விண்ணில்: 01 — 06 — 1999

திருமதி

ஹெலன் தங்கரெட்டினம் அருளப்பு

அன்று கல்லறையில் உன்னை வைத்து
கையாலே மண்ணிட்டு!
கதறியே அழுது நின்றோம்.
இன்று உள்ளத்தில் உன்னை வைத்துப்
பரிதவித்து நிற்கின்றோம் அம்மா!

01-06-1999 இல் இறைவனடி சேர்ந்த எங்கள் தாயாரின் மரணச் சடங்கிலும் திருப்பலியிலும் பங்கு கொண்ட உற்றார், உறவினர், குருக்கள், கன்னியர்களுக்கும் மலர் வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும் தந்தி மூலம் அனுதாபச் செய்தி அனுப்பியோருக்கும் மற்றும் சகல வகைகளிலும் உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

இல. 64. பழைய பூங்கா வீதி,
கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம். (67070)

போஷாக்கு

மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலய சிறுவர்களுக்கான போஷாக்கு உணவு வழங்கும் நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு மேற்படி வித்தியாலயத்தில் நடைபெறும்.

பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் நடைமுறைப்படுத்திவரும் பள்ளிச் சிறுவர்களுக்கான போஷாக்கு உணவு வழங்கும் திட்டத்தின் கீழ் நடைபெறும் இந்த நிகழ்வில் மேற்படி சேவாச்சிரமத்தின் செயலாளர் சுவாமி சித்ரூபானந்தா கலந்து கொண்டு நிகழ்வை ஆரம்பித்து வைப்பார்.

உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

யாழ். பல்கலைக்கழக வெள்ளிவிழாவை யொட்டி நடத்தப்படும் விலகல்முறையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் இன்று ஆரம்பமாகவிருக்கின்றது.

இன்று இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:

★ பிற்பகல் 4-00 மணி — பொற்பதி ஐ. வி. க. அணி எதிர் சென். மைக்கல் வி. க. அணி.

★ பிற்பகல் 5-15 மணி — கிறீங்கிங்ஸ் வி.க. அணி எதிர் கோண்டாவில் மத்தி வி. க. அணி. [இ-3]

நாகம்ஸ்

சுன்னாகம்

கவர்ச்சித் தென்றல்
பிரசாந்
உலக அழகி
ஐஸ்வர்யா
நாசர் நடித்த

ஜீன்ஸ்

(ரீல்ஸ்)

காட்சிகள் 11.00, 2.30
[புதிய நேரம்]
[66950]

ராஜா

யாழ்ப்பாணம்

8ஆம் திகதி வரை

விஜய், தேவயானி, ரம்பா- மணிவண்ணன், செந்தில் மற்றும் பலர் நடித்த

நினைத்தேன் வந்தாய்

10.30, 2.30
[சி/8035]

கலைவாணி கல்வி நிலையம்

கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

A/L 2001

கணக்கீடு

திரு. ப.கணேஸ்

ஆரம்பம்:- 01 – 07 - 99
வியாழன் 5-00 மணி

A/L 2000

பொருளியல்

"சந்தைப் பொருளாதாரம்"

திரு. விக்கி

ஆரம்பம்:- 03 – 07 – 99
சனிக்கிழமை 4-30 மணி

2001

விரைவில் ஆரம்பம்

(சி/8061)

மரண அறிவித்தல்கள்

கந்தசாமி இராசதுரை

கற்குளி சாவகச்சேரியைச் சேர்ந்த கந்தசாமி இராசதுரை 27-06-99 இல் ஹொலண்டில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி—முத்துப்பிள்ளை தம்பதிகளின் கனிஷ்ட புதல்வனும் இராணியின் அன்புக்கணவரும் ரமேஸ்கண்ணன், ரஜனி, ராகினி ஆகியோரின் அன்புத் தந்தையும், பொ. கமலாம்பிகை, க. திருநாவுக்கரசு (பிரதேச நிர்வாக அலுவலகம், தபால் திணைக்களம், யாழ்ப்பாணம்), க. தம்பு (ஓய்வு பெற்ற அஞ்சல்அதிபர், பிரதேச தபால் அத்தியட்சர் அலுவலகம், முல்லைத்தீவு), க. சிவராசா (அஞ்சல்அதிபர், வேலணை) ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற சி. பொன்னுத்துரை மற்றும் தி. மல்லிகாதேவி, த. தவலட்சுமி சி. மதிவதனி ஆகியோரின் மைத்துனரும் நடராசா தம்பதிகளின் மருமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 01-07-99 வியாழக்கிழமை ஹொலண்டில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தகவல்:
சகோதரி — சகோதரர்கள்

இல 716, முதலாம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (67067)

Dr. பொன்னம்பலம் சொர்ணலிங்கம்

கொக்குவில் மேற்கைச் சேர்ந்த டாக்டர் பொன்னம்பலம் சொர்ணலிங்கம் அவர்கள் 28-06-99 திங்கட்கிழமை அதிகாலை அகால மரணமானார்.

அன்னார் பொன்னம்பலம் காலஞ்சென்ற சொர்ணம்மா தம்பதிகளின் அன்பு மகனும், இணுவில் தெற்கைச்சேர்ந்தபொன்னுத்துரை(இளைப்பாறியஆசிரியர்) செல்லம்மா தம்பதிகளின் மருமகனும், ஜெயராணியின் அன்புக் கணவரும், கிரிசன், ஆதிசன் (கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை மாணவர்கள்), கஜவாசுகி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சண்முகரட்ணம் (இளைப்பாறிய ஆசிரியர்), சொர்ணகாந்தி, ரமணி, காலஞ்சென்றவர்களான மகாலிங்கம், சோதிலிங்கம் ஆகியோரின் சகோதரனும் பரமேஸ்வரி (இளைப்பாறிய ஆசிரியர்), செல்வரட்ணம் (ஜேர்மனி), செல்வராசா, சந்திரமலர் (லண்டன்) பாஸ்கரன் (லண்டன்), சுபாஸ்கரன் (சுவிஸ்), திவாகரன், கருணாகரன், ஜெயகுமாரி, ஐங்கரன் (யாழ். பல்கலைக்கழகம்), சுதாகரன் (லண்டன்), சிவகரன் (NDT மொறட்டுவ பல்கலைக்கழகம்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01-07-99) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மாலை 4-00 மணியளவில் தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பொ. ஐங்கரன்
(மைத்துனன்)

ஆனைக்கோட்டை வீதி.
குளப்பிட்டி, கொக்குவில். (67073)

மயிலு சின்னத்தங்கம்

(அன்னாள்)

உடுவில் "இரட்ணா வில்லா" வைப் பிறப்பிடமாகக் கொண்ட மயிலு சின்னத்தங்கம் 29—06—99 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மயிலுவின் மனைவியும், காலஞ்சென்ற குணரட்ணம் (பொலீஸ் அதிகாரி), திருமதி நேசம்மா கந்தையா, தர்மரட்ணம் (இளைப்பாறிய கடற்படை அதிகாரி ஆஸ்திரேலியா), ஜீவரட்ணம் (இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்-கனடா), கனகரட்ணம் (இளைப்பாறிய கடற்படை அதிகாரி), சற்குணம் (பொலீஸ் அதிகாரி - லண்டன்), மதிரட்ணம் ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜெயராணி (திருப்பதி), காலஞ்சென்ற கந்தையா, காலஞ்சென்ற நேசமலர், புஸ்பம் சிசிலியா, புஸ்பமலர், றூபி-மகேஸ்வரி, பேள்ளைபகுமாரி ஆகியோரின் மாமியாரும், தவரட்ணம் (ஜேர்மனி), தேவரட்ணம் (கொழும்பு), காந்திமலர்-இராசேந்திரம் (நோர்வே), ஜீவமலர் ஜெயநாயகம் (கொழும்பு), குணமலர் விஜயசேகரன் (நோர்வே) வினோதினி துரைச்சாமி (கொழும்பு), காலஞ்சென்ற விமலரட்ணம், விமலாதேவி வேதநாயகம் (பிரான்ஸ்), குலரட்ணம் (பிரான்ஸ்), பேரின்பரட்ணம் (பிரான்ஸ்), விஜயரட்ணம் (கொழும்பு), சிவரட்ணம் (சுவிஸ்), பரமரட்ணம் (பிரான்ஸ்), விஜித்தா செல்வசிங்கம், சிவாஜி (பம்பாய்), அலிஸ் எமல்டா அஞ்சிலோ (ஆஸ்திரேலியா), அருள்மேரி யேசுதாசன் (ஆஸ்திரேலியா), எட்விஸ் மதிவதனி அந்தோனிமுத்து (கனடா), வசந்தன் (கனடா), மோகன் (இத்தாலி), ஜெகன் (கனடா), அபரஞ்சிதா ஆனந்தராசா, அன்பழகன் (சுவிஸ்), அகல்யா மதிசீலன் (இராமநாதன் நுண்கலைப்பீடம் இறுதியாண்டு), டாக்டர் நந்திவிறிபேக்கா (மொஸ்கோ), அன்ரன் மதியழகன் (ஹொலண்ட்), நிஷாந்தினி றேச்சல் (பதுளை), ஜெயதேவா, காலஞ்சென்ற பிரமதேவா, புளோசம், ஏஞ்சல், ஆகியோரின் பேர்த்தியும் 56 பூட்டப் பிள்ளைகளின் பூட்டியும் 3 கொப்பாட்டப் பிள்ளைகளின் கொப்பாட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் ஆராதனையின் பின்னர் அவரின் இல்லத்திலிருந்து இன்று (01 — 07 — 99) வியாழக்கிழமை காலை 10-00 மணிக்கு நல்லடக்கத்துக்காக மல்வம் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அன்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
எம். ஜி. கனகரட்ணம்
(கனடா) (67045)

ஆக்வேன்,
உடுவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகிஸ்தானுக்கு பெரும் கடன் உதவி கிடைப்பதை அமெரிக்கா தடுக்கும்

வாஷிங்ரன், ஜூலை 1

சர்வதேச நாணய நிதியம் பாகிஸ்தானுக்கு வழங்க வுள்ள 10 கோடி அமெரிக்க டொலர் கடன் உதவியை தடை செய்வதற்கான முயற்சியை அமெரிக்கா மேற்கொள்ளும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

காஷ்மீர் விவகாரத்தில் பாகிஸ்தானை இணங்கச் செய்யும் முயற்சியாகவே இந்த நடவடிக்கையை அமெரிக்கா மேற்கொள்ளவுள்ளதாக வெள்ளை மாளிகை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையை சமாளிப்பதற்கான ஒரு யுக்தியாக இந்தக் டனுதவித் தடையை அமெரிக்கா பயன்படுத்தப்போவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் இந்தியாவுடன் முழு அளவிலான யுத்தத்துக்குத் தயாராவதை அனுமதிக்க முடியாது.

அதேவேளை—

இந்திய எல்லைக்குள் ஊடுருவியுள்ள ஊடுருவல் காரர் மற்றும் பாகிஸ்தான் இராணுவத்தினரை உடனடியாக வாபஸ் பெற வேண்டும் என கிளின்ரன் நிர்வாகம் ஏற்கனவே பாகிஸ்தானுக்கு கோரிக்கை ஒன்றை விடுத்திருந்தது. இந்தக் கோரிக்கைக்கு பாகிஸ்தான் இதுவரை சரியான பதில் எதனையும் வழங்கவில்லை.

இந்நிலையில் பாகிஸ்தானை அடிபணியச் செய்யும் ஒரு மார்க்கமாகவே பாகிஸ்தானுக்கு கிடைக்கவுள்ள சர்வதேச நாணய நிதியக் கடனை தடை செய்யப் போவதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஜ-க)

11 ஆயிரம் சனத்தொகை கொண்ட நாரூ நாட்டுக்கு ஐ. நா.வில் அங்கத்துவம்!

நியூயோர்க், ஜூலை 1

பதினோராயிரம் பேரை மட்டுமே மக்கள் தொகையாகக் கொண்ட ஒரு நாடு ஐக்கிய நாடுகள் சபையின் 186 ஆவது உறுப்பு நாடாக இணைந்துள்ளது.

பசுபிக் பிராந்தியத்தில் உள்ள குட்டித் தீவான நாரூ என்ற நாடே இவ்வாறு ஐ. நா. சபையில் இணைக்கப்பட்டுள்ளது.

இந்த நாட்டின் அருகிலுள்ள இன்னுமொரு குட்டித் தீவான கிரிப்பட்டியும் ஐ.நா. சபையின் 187 ஆவது நாடாக இணைந்துள்ளது.

ஐ. நா. பாதுகாப்புச் சபை இந்த இரு நாடுகளும் ஐ.நா. வில் இணைவதற்கு ஆதரவாக வாக்களித்துள்ளது. இந்த வாக்கெடுப்பில் சீனா நடு நிலைமை வகித்தது. (உ-6)

ஈராக் மறுத்தது

பாக்தாத், ஜூலை 1

ஈராக் மீதான பொருளாதாரத் தடைகளை நீக்க பிரிட்டன் முன்வைத்த யோசனைகளை ஏற்க முடியாது எனக்றி ஈராக்தெரிவித்துள்ளது.

பிரிட்டனின் இந்தச் செயற்பாடு உள்நோக்கம் கொண்டது. ஐ. நா பாதுகாப்புச் சபையின் தீர்மானத்தில் இல்லாத புதிய நிபந்தனைகளை புகுத்துவதை நோக்கமாகக் கொண்டது. ஈராக்கை அமெரிக்கா மற்றும் பிரிட்டிஷ் தரப்பினருக்கு அடி பணியவைக்கும் நிலைமை இதனால் ஏற்படும் என ஈராக்கின் இணைப் பிரதமர் கருத்துத் தெரிவித்துள்ளார். (இ-க)

பேரணி

சேர்பிய நகரில் எதிர்க் கட்சிகள் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தியுள்ளன.

அதிபர் மிலோசெவிக் பதவி விலக வேண்டும்; அத்துடன் சுதந்திரமான முறையில் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் எனக் கோரியே பேரணி நடத்தப்பட்டது. கொசோவோ நெருக்கடிக்குப் பின் நடைபெற்ற மாபெரும் பேரணி இதுவாகும்.

கோடை காலம் முடிவதற்கு முன்பாக கொசோவோவின் ஏனைய பகுதிகளிலும் இவ்வாறான ஆர்ப்பாட்டப் பேரணிகளை நடத்தப்போவதாக எதிர்க்கட்சிகள் கூறி வருகின்றன. (ஐ-க)

கோரிக்கை

அங்காரா, ஜூலை 1

குர்டிஷ் தலைவர் அப்துல்லா ஒகலனுக்கு விதிக்கப்பட்ட மரணதண்டனையை நிறைவேற்ற வேண்டாம் என ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் துருக்கியைக் கேட்டுள்ளன.

ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிப்பதற்கு துருக்கி [illegible] இவ்வேளையில் ஐரோப்பிய நாடுகளின் இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது. (ஐ-க)

17 கிராமவாசிகள் காஷ்மீரில் கொலை

புதுடில்லி, ஜூலை 1

ஜம்மு - காஷ்மீர் மாநிலத்தின் இரு கிராமங்களில் குறைந்தது 17 பேர் இனந் தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாக இந்தியப் பொலீஸார் தெரிவிக்கின்றனர்.

பாகிஸ்தானின் நிர்வாகத்துக்கு உட்பட்ட காஷ்மீர் எல்லைப்புற கிராமங்கள் இரண்டினிலேயே இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

காஷ்மீர் தீவிரவாதக் குழுக்களில் ஒன்றான ஹிஸ்புல்லா முஜாகுதீனுக்குள் நிலவும் உட்பூசல்களின் விளைவாகவே இக்கொலைகள் நடந்திருக்கக் கூடும் என இந்தியப் பொலீஸார் கூறுகின்றனர். ஆனால் இந்திய இராணுவமே இச் செயலைச் செய்திருக்கலாம் என்று முஜாகுதீன் கூறுகின்றது.

தேவாலயத் தலைவர் மிலோசேவிக் மீது கண்டனம்

பெல்கிரேட், ஜூலை 1

சேர்பியாவின் தேவாலயம் ஒன்றின் தலைவர் அருட்தந்தை பைலி காரசாரமான கண்டனங்களை யூகோஸ்லாவிய அதிபர் மிலோசேவிக்கு எதிராகத் தெரிவித்துள்ளார்.

சேர்பிய மக்களுக்கு ஏற்பட்ட விளைவுகளுக்கு மிகப் பெரும் பொறுப்பு யூகோ அதிபரைத்தான் சாரும்.

சேர்பிய மக்கள் மீது அழிவுகளைக் கொண்டு வந்தவர் மிலோசேவிக்தான்.

கொசோவோவில் உள்ள சேர்வியர்களை அல்பேனியர்கள் கொல்வது, கடத்திச் செல்வது, சேர்பியர்களின் வீடுகளுக்கு தீ மூட்டுவது போன்ற செயல்களை அல்பேனியர்கள் செய்து வருகின்றனர். இதனால் சேர்பியர்கள் மத்தியில் அச்சம் உருவாகியுள்ளது.

இப்படி அருட்தந்தை மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை — யூகோ அதிபர் மிலோசேவிக் உடனடியாக இராஜினாமாச் செய்து வெளியேற வேண்டும் எனத் தலைநகர் பெல்கிரேட்டில் சேர்பிய அறிஞர்கள் சுமார் 50 பேர் கோரிக்கை விடுத்துள்ளனர். [இ-க]

உலக அரங்கில்

கொசோவோவில் சேர்பியர்கள் உயிர்பிழைத்து வாழ்வதை உறுதிப்படுத்துவதற்கு ஐ. நா. அவசர நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

தென்கொரிய தலைநகரில் 23 குழந்தைகள் தீயில் கருகிப் பலி!

சியோல், ஜூலை 1

தென் கொரியாவின் தலைநகர் சியோவில் உள்ள சோடைகால விடுதி ஒன்றில் நேற்று முன்தினம் இரவு திடீரென ஏற்பட்ட தீவிபத்தில் 23 குழந்தைகள் உயிரிழந்துள்ளன.

விடுதியின் மேல்மாடிக் கட்டடத்திலேயே தீப்பற்றியதாக தெரிவிக்கப்படுகின்றது. எனினும் அதற்கான காரணம் எது என்பது தெரிவரவில்லை.

கோடை கால விடுமுறையைக் கழிப்பதற்காக சுமார் ஐந்நூறு குழந்தைகள் இந்த விடுதியில் தங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க)

மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

யாழ். பல்கலைக் கழக
25-ம் ஆண்டுவெள்ளிவிழாவையொட்டி
யாழ். உதைபந்தாட்ட லீக் கழகங்களுக்கிடையிலான
மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி
ஆரம்பம்: 01-07-99 இன்று மாலை 4.00மணி
பங்குபற்றும் கழகங்கள்
1. பொற்பதி ஐக்கிய விளையாட்டுக் கழகம்
எதிர்
சென். மைக்கல் விளையாட்டுக்கழகம்
2. கிறின் கிங்ஸ் விளையாட்டுக்கழகம்
எதிர்
கோண்டாவில் மத்திய விளையாட்டுக்கழகம்
இடம்: யாழ். பல்கலைக்கழக விளையாட்டு மைதானம்
பிரவேசம் இலவசம்
போட்டிக்குழு, விளையாட்டு அவை,
[67049[யாழ். பல்கலைக்கழகம்.

மூவ் இடுப்பு வலி, மூட்டு வலி, முதுகு வலி, வீக்கம், தசைப்பிடிப்பு என்பவற்றுக்கான உடனடி நிவாரணி.

இப்போது 25 / 50 கிராம பேக்குகளில் கிடைக்கிறது
வலியில் ஆ... முதல்...ஆஹா வரை
யாழ்ப்பாணத்தில் எமது ஏக விநியோகத்தர்.
ஜெகன் மருந்தகம் 462/B, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
மற்றும் யாழ்ப்பாணமெங்குமுள்ள மருந்தகங்கள் பல் பொருள் வணிக நிலையங்கள். அழகு சாதன கடைகள். சிலலறை கடைகள்
(சி/8041)

இதய அஞ்சலி
டாக்டர் P. சொர்ணலிங்கம்
M B B S (Cey). L R.C.P (Lond) M R C S (Eng) M.R C P (U K)
சேவை என்றால் இன்னதென இலக்கணம் வகுத்து வாழ்ந்து காட்டிய மாமேதைக்கு எமது
இதய அஞ்சலிகள்
'தெய்வம் தெய்வீகமானது'
பாடசாலைச் சமூகம்,
வட்டு. திருஞானசம்பந்த வித்தியாசாலை.
(67043)

கண்ணீர் அஞ்சலி
வைத்திய கலாநிதி
பொன்னம்பலம் சொர்ணலிங்கம்
[முன்னாள் வைத்திய அதிகாரி
மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை]
வைத்திய கலாநிதி பொ. சொர்ணலிங்கம் அவர்கள் எம்பிரதேச மக்கள் வைத்திய சேவையைப் பெற கஷ்டப்பட்ட காலப்பகுதிகளில் எமது கூட்டுறவு வைத்தியசாலை மூலம் தனது தன்னலமற்ற சேவையை தன் உயிரிலும் மேலாக மதித்து சேவையாற்றியதை நினைவு கூருகின்றோம். அன்னாரின் திடீர் மறைவினால் நாம் அதிர்ச்சியும், வேதனையும் அடைகின்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
பணிப்பாளர்களும், ஊழியர்களும்.
மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை.
(67065)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ்சிறு விளம்பரம்

விற்பனைக்கு

NEWS MATE 80 நீலம் மோட்டார் சைக்கிள், கொழும்பு லைசன்ஸ், COMPUTER பதிவுப் புத்தகத்துடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: க. பத்மநாதன் [மினிபஸ் உரிமையாளர்] மெதடிஸ் சேர்ச் அருகில், அச்செழு வடக்கு. [67012]

வீடு வளவு விற்பனைக்கு

மீசாலை வடக்கு, கண்டி வீதியில் இருந்து 100 யார் தொலைவில் சகல வசதி, பிரயோசனங்களுடன் 6 பரப்புடன் கூடிய வீடுவளவு விற்பனைக்கு உண்டு. விளம்பர இல. 900, மே/ பா. உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [67025]

T.V. கள் விற்பனைக்கு

2030, 2060. 2032 மற்றும் 27'' Sony, Netional ரீ.விகள் விற்பனைக்குண்டு. (மிகவும் மலிவானவிலையில்) எஸ். சதாகரன், மூளாய் றோட். மத்தி யூஸ் லேன், சுண்டுக்குளி. (66978)

தேவை

Broiler இறைச்சிக்கோழிகள் தேவை. நல்ல விலை கொடுக்கப்படும். தொடர்பு: தன பாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (67003)

மணமகள் தேவை

யாழ். கிறிஸ்தவ மதம் வயது 48 கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த மாதம் 7500/- சம்பளம் எடுக்கும் அரச உத்தியோகத்தருக்கு மணமகள் தேவை. விளம்பர இல. 898. மே/பா உதயன், 361. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (67002)

விளையாட்டு விழா

வடமராட்சி, ஜூலை 1

அல்வாய் வடக்கு குமுதெணிவிக்கிரமன் சனசமூக நிலைய திரவியநாதன் பாலர் பாடசாலை வருடாந்த விளையாட்டு விழா எதிர்வரும் 3 ஆம் திகதி சனிக்கிழமை திருமதி இ. ஜெகதீஸ்வரி தலைமையில் நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ. சிவசுவாமி பிரதம விருந்தினராகவும். பருத்தித்துறை தென்னை பயன்வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் வீ. ஸ்ரீ இராமச்சந்திரன், சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வ பரமேஸ்வரி பொன்னையா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக் கலந்து கொள்வார்கள். (ஐ-173)

உடையமைத்தல் பயிற்சி நெறி

தென்மராட்சி, ஜூலை 1

கல்வித் திணைக்களத்தின் முறைசாராக் கல்வி திட்டத்தின் கீழ் மறவன்புலோ சகல கலாவல்லி வித்தியாலயத்தில் பாடசாலையை விட்டு விலகியவர்களுக்கான உடை அமைத்தல் பயிற்சி வகுப்பும் கல்வி அறிவில்லாதவர்களுக்கான எழுத்தறிவாற்றல் வகுப்பும் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டன.

வித்தியாலயஅதிபர் ச. ஞானலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் தென்மராட்சி வலய முறைசாராக் கல்விப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் க, பாலசுப்பிரமணியம் வகுப்புக்களை ஆரம்பித்து வைத்தார்.

[ஐ-117]

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய

அன்னை கண்ணீர் வடிக்கின்றாள்!

Dr. P. சொர்ணலிங்கம்

அவர்கள் 28 - 06 - 99 இல் அகால மரணம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த வேதனை அடைவதுடன் அன்னாரின் குடும்பத்தினரின் துன்பத்தில் நாமும் பங்கு கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கொக்குவில் மத்திய சனசமூக நிலையமும், விளையாட்டுக் கழகமும்.

[66059]

புன்னாலைக்கட்டுவன் வடக்கு

நரசிங்க வைரவர் ஆலய

கட்டட நிதிக்கான

அதிர்ஷ்டலாபச் சீட்டு முடிவுகள்

29 - 06 - 99 அன்று மேற்படி ஆலயத்தில் நடைபெற்ற அதிர்ஷ்டலாபச் சீட்டு முடிவு இலக்கங்கள் வருமாறு:

முதலாம் பரிசு – 1493 இரண்டாம் பரிசு – 2830
மூன்றாம் பரிசு – 701

ஆறுதல் பரிசு இலக்கங்கள்:
2942, 1368, 2949, 1522, 900

– தர்மகர்த்தா

நரசிங்க வைரவர் ஆலயம்,
புன்னாலைக்கட்டுவன். (67055)

ஆசிரிய சேவையை நிறைவு செய்து (30-06-99) இல் ஓய்வு பெறும்

பிரதிபலன் கருதாத பிரதி அதிபர்

திருமதி

என். எச். வில்லியம்ஸ்

S. L. P. S.-2. II

[புனித மரியாள் வித்தியாலயம் (O. L. R) யாழ்ப்பாணம்]

அவர்களது

சேவை நலன் பாராட்டு

யாழ். புனித மரியாள் வித்தியாலயத்தின் புகழாரத்தில் பளிச்சிட்ட முத்துக்களில் சிறப்பித்துக் கூறக் கூடியவர் எங்கள் பிரதி அதிபர் திருமதி என். எச். வில்லியம்ஸ் ஆவார்

இவர் எங்கள் வித்தியாலயத்தின் இருதயம் என்று கூறின் அது உயர்வு நவிற்சி அன்று. 1968 இல் கல்விப் புலத்தில் நுழைந்து, இலங்கையின் பல்வேறு மாவட்டங்களிலும் தனது நற்சேவையை வழங்கி, தான் பிறந்த மண்ணிற்குப் பணியாற்றும் நோக்கில் 01 – 09 - 91 இல் எமது வித்தியாலயத்தில் பிரவேசித்தார்.

பிரதி அதிபராக இங்கு பொறுப்பேற்ற இவர் பாடசாலை அபிவிருத்திக்குப் பல்வேறு வழிகளில் அயராது பாடுபட்டவர். இவரது சிந்தனைகள் பாடசாலையையும், மாணவர் நலன்களையும் சுற்றியே வந்துகொண்டிருக்கும் ஆசிரியர்களையும், மாணவர்களையும் அன்பான அணுகுமுறையினால் வளமுறச் செய்தவர். அரச பணியிலிருந்து ஓய்வுபெற்றாலும், இவரது தன்னலமற்ற கல்விச்சேவையும், பொதுச் சேவையும் தொடர அடைக்கல அன்னையிடம் இறைஞ்சுகிறோம்.

அதிபர், உப அதிபர்,
ஆசிரியர்கள், மாணவர்கள்,
நிர்வாக ஊழியர்கள்,
பா. அ. சங்கத்தினர்.

புனித மரியாள் வித்தியாலயம்
(O.L.R) யாழ்ப்பாணம்

(66979)

அறிவித்தல்

இரட்சிப்பின் சத்தம் சபை

இரட்சிப்பின் சத்தம் சபையின் நான்கு ஆண்டுகள் நிறைவை முன்னிட்டு நாளை 02 – 07 – 99 வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிமுதல் ஞானஸ்நான ஆராதனையும், அதனைத் தொடர்ந்து நன்றித்துதி ஆராதனையும் இல: 136, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள எமது சபையில் நடைபெறும். இவ் வறிவித்தலை அனைத்து ஆவிக்குரிய சபைகளும் ஏற்றுக்கொள்ளும்படி அன்புடன் வேண்டுகிறோம்.

நன்றி!

– சபை நிர்வாகம்

இல. 136, புகையிரத நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

[67064]

மரண அறிவித்தல்கள்

திருமதி அன்னலட்சுமி இராசையா

காரைநகர் மாப்பாணவூரியைச் சேர்ந்த திருமதி அன்னலட்சுமி இராசையா 29 – 06 – 99 (செவ்வாய்க் கிழமை) அன்று இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ச. இராசையா அவர்களின் அன்பு மனைவியும், செல்வரட்ணம் [ஓவசியர் லண்டன்] அவர்களின் அன்புச் சகோதரியும், சாரதாமணி, கலைமகள், இராஜயோகன் [சுங்க அதிகாரி—கொழும்பு], சுசிலாதேவி [திருகோணமலை], சரோஜா [கொழும்பு] ஆகியோரின் பாசமிகு தாயாரும், பேரம்பலம் [ஓய்வு பெற்ற எழுதுவினைஞர்], சண்முகலிங்கம் [ஆசிரியர்], டாக்டர் சந்திராதேவி [கொழும்பு], சபாநடேசன் [''X''ray தொழில் நுட்பவியலாளர் திருமலை வைத்தியசாலை], விஜேந்திரன் [கணக்காளர் கொழும்பு] ஆகியோரின் அன்பு மாமியும் வாகீசன், வாசுகி, செந்தாமரை, தயாளன், தாருண்யா, லக்ஷரண்யா, உமாகாந்தன், கலாதரன், வாணி, வசீகரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று 30–06–99 புதன்கிழமை மாலை 3.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சாம்பலோடை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்,

மாப்பாணவூரி,
காரைநகர். [67047]

நாகமணி இராசதுரை

அரியாலையைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட நாகமணி இராசதுரை 29 - 6 – 99 அன்று பிரான்ஸில் காலமானார்.

இவர் சோதிமலரின் அன்புக் கணவரும் றஞ்சித், ரமணன், ரகுணன். சந்திரன், றாஜினி ஆகியோரின் அன்புத் தந்தையும் நந்தினி, சாந்தா, வனஜா, யோகன், கோமதி ஆகியோரின் அன்பு மாமனாரும் மகேஸ்வரி, யோகராஜா, பரமலிங்கம் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வீ. ராசு
(நல்லூர்)

555 20, பருத்தித்துறை வீதி,
நல்லூர், (67053)

செல்வி பரமேஸ்வரி செல்லத்துரை

கோப்பாய் தெற்கை பிறப்பிடமாகக் கொண்ட செல்வி பரமேஸ்வரி செல்லத்துரை 28–06–99 அன்று கொழும்பில் காலமானார். அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் கனகம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும் பரமேஸ்வரன், பாக்கியநாதன், பத்மறஞ்சி, பத்மாவதி (ஜேர்மனி), பத்மநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் இந்திராதேவி, விஜயலட்சுமி, மகாலிங்கம் (வர்த்தக முகாமையாளர் நீர்வேலி M.P.C.S), தவராஜா (ஜேர்மனி) வசந்தகுமாரி (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனியும் துஷிதா [சித்தமருத்துவத்துறை 2ஆம் வருடம்], கஜன் [லண்டன்], கிரிஜா [யா/ இ. ம. கல்லூரி], அருட்செல்வன் [ஜேர்மனி], யாழினி [ஜேர்மனி], ஆகியோரின் பெரியதாயாரும் கிரிதரன் [கனடா], பகீதரன் [ஜேர்மனி], கிருஷாந்தி (யா/ இ. ம. கல்லூரி), கிருஷங்கர் [யா/ கொ. இ. கல்லூரி], கிருத்திகா [யா/ இ. ம. கல்லூரி], கிருபாலினி [யாழ்/ இ. ம. கல்லூரி], ஷிறானி (ஜேர்மனி) ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01–07–99) வியாழக்கிழமை பி. ப. 2 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கோப்பாய் கந்தன்காடு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
திருமதி கனகம்மா செல்லத்துரை
(தாய்)

'தாய் அகம்'
பழைய வீதி,
கோப்பாய். [67062]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனவிகிதாசாரமின்றி வேலைவாய்ப்பு; அமைச்சரின் யோசனை நிராகரிப்பு

கொழும்பு, ஜூலை 1
வேலைவாய்ப்பு மற்றும் பதவி உயர்வுகளில் இன விகிதாசாரத்தைக் கடைப்பிடிக்கும் நடைமுறையை வாபஸ் பெறவேண்டும் என்று பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் பெருந்தோட்டத்துறை அமைச்சர் ரட்ணசிறி விக்கிரம நாயக்க சமர்ப்பித்த யோசனை அமைச்சரவையால் நிராகரிக்கப்பட்டது.

இனவிகிதாசார முறைக்குப் பதிலாக மாற்று முறை ஒன்று குறித்து ஆராயக் குழு ஒன்றை நியமிப்பது என்று அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

இனவிகிதாசார முறையால் பாதிக்கப்பட்ட அரச ஊழியர்கள் தாக்கல் செய்த மனுக்கள் மீது அரசுக்கு எதிராக தீர்ப்பு வழங்கப்பட்டதால் இந்த முறையை ரத்துச் செய்ய சிபார்சு செய்ததாக அமைச்சர் விக்கிரம நாயக்க தெரிவித்தார்.

இந்த முறையை ரத்துச் செய்த பின்னர் சிறுபான்மையினருக்கு எந்த வகையில் நியாயம் வழங்குவது என்பது தொடர்பாக தெரிவிக்கப்படவில்லை என்றும்—

மாற்று நடைமுறையை வகுத்த பின்னர் இதை ரத்துச் செய்யலாம் என்றும் — அமைச்சர் தொண்டமான் ஆலோசனை கூறினார்.

இதையடுத்து இந்த விடயத்தை ஆராய உயர் மட்டக் குழு ஒன்று அமைப்பது என்று அமைச்சரவை முடிவு செய்தது. (ஐ-3)

வேலணை - குறிகாட்டுவான் வீதியைத் திருத்தக் கோரிக்கை

வேலணை. ஜூலை 1
வேலணை — குறிகாட்டுவான் பிரதான வீதியினைத் திருத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வேலணை பிரதேச சபைத் தலைவர் யாழ். மாவட்டவீதிஅபிவிருத்தி அதிகார சபை நிறைவேற்றுப் பொறியியலாளரைக் கடிதம் மூலம் கோரியுள்ளார்.

இவ்வீதி பல வருடங்களாக செப்பனிடப்படாமல் இருப்பதனால் வீதியினூடாகப் போக்குவரத்தில் ஈடுபடும் பயணிகள் பாதிக்கப்படுவதுடன் வாகனங்கள் சேதமடையும் நிலை ஏற்படுகின்றது.

இவ் வீதியால் 776 ஆம் இலக்க பேருந்துச் சேவை குறிகாட்டுவான் வரை நடைபெறுகின்றது. அநேக நாள்களில் மேற்படிபாதை இலக்க பேருந்து இடைநடுவே சக்கரங்கள் காற்றுப் போயும், உதிரிப்பாகங்கள் சேதமடைந்தும் தனது சேவையைச் சீராகச் செயலாற்ற இயலாத நிலை ஏற்படுகிறது. அத்தோடு ஏனைய தீவுகளிலிருந்தும் வைத்திய வசதிக்காக வரும் நோயாளர்களை அக்கரையிலிருந்து இக்கரைக்கு அழைத்துச் செல்வதில் காலதாமதம் ஏற்படுகின்றது.

இதனால் வீணான உயிரிழப்புக்களும் ஏற்பட வாய்ப்புண்டு. எனவே வீணான உயிரிழப்புக்களைத் தவிர்க்கும் பொருட்டு மேற்படி வீதியினைச் செப்பனிட வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வேலணை பிரதேச சபைத் தலைவர் கேட்டுள்ளார். (ஐ-167)

உடுப்பிட்டி சுற்றிவளைப்பில் இளைஞர் கைதாகி விசாரணை

யாழ்ப்பாணம், ஜூலை 1
உடுப்பிட்டிப் பகுதியில் கடந்த 26 ஆம் திகதி படையினரால் நடத்தப்பட்ட சுற்றிவளைப்பு ஒன்றில் அப்பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

காலை வேளையில் இப்பகுதி முழுவதும் சுற்றிவளைக்கப்பட்டு வீட்டிலிருந்த பொது மக்கள் அனைவரும் குறிப்பிட்ட இடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு முகமூடி முன்னிலையில் நிறுத்தப்பட்டனர்.

முகமூடி அணிந்தவர்களினால் அடையாளம் காட்டப்பட்ட — உடுப்பிட்டி கம்பர் மலையைச் சேர்ந்த — எம். சிவதர்சன் (வயது 25) என்ற இளைஞர் படையினரால் கைது செய்யப்பட்டார்.

இக்கைது தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (உ-6)

பிரபா அனுமதி தந்தால் வன்னியிலும் ஆளுநரின் இடம்பெயர் சேவை

அசோகா ஜெயவர்த்தனா கூறுகிறார்

திருகோணமலை, ஜூலை 1
விடுதலைப் புலிகள் தலைவர் வே. பிரபாகரன் அனுமதி தந்தால் வன்னி மக்களின் பிரச்சினைகளை ஆராய அங்கு இடம்பெயர்சேவையை நடத்த தயாராகவுள்ளேன்.

வடக்கு—கிழக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோகா ஜெயவர்த்தனா இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தூதுக்குழுவுடன் செவ்வாயன்று நடத்திய பேச்சுக்களின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கு—கிழக்கு ஆசிரியர்களுக்குரிய இடர்காலக் கொடுப்பனவை அளிப்பதற்குத் தேவையான நிதியை வழங்குமாறு ஜனாதிபதி திறைசேரிக்கு பணிப்புரை விடுத்துள்ளார் என்றும்—

அடுத்த மாதத்தில் இந்தக் கொடுப்பனவு மற்றும் அதிபர்களுக்கான நிலுவைப் பணம் ஆகியன வழங்கப்படும் என்று — ஆளுநர் தெரிவித்தார்.

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதிப் பாடசாலைகளுக்குப் இரசாயனப் பொருள்கள் மற்றும் கல்விசார் உபகரணங்களை எடுத்துச்செல்ல ஜனாதிபதி அனுமதி அளித்துள்ளார் என்றும் ஆளுநர் தூதுக்குழுவிடம் தெரிவித்தார். [உ-3]

வாராந்த நிகழ்வு

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஆதரவில் ஸ்ரீசெல்வச்சந்நிதி முருகன் ஆலய சுற்றாடலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும் வாராந்த நிகழ்வில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு 'தானமும் தவமும்' என்ற தலைப்பில் ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி மு. திருநாவுக்கரசு உரை நிகழ்த்துவார்.

பேரவையின் தலைவர் சு, திருப்பரங்கிரிநாதன் தலைமையில் இந்நிகழ்வு நடைபெறும்.

இந்நிகழ்விற்கான அறிமுக உரையை மருத்துவத்துறை நீதிமன்ற பதிவாளர் சி. சந்திரலிங்கம் நிகழ்த்துவார். (ஐ-30)

அறநெறிப் பாடசாலை

வேலணை, ஜூலை 1
அல்லைப்பிட்டியில் அறநெறிப் பாடசாலை ஒன்று மிகவிரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது. வேலணை இந்து வளர்ச்சிக் கழகம் இதற்கான ஒழுங்குகளை செய்து வருகின்றது. (ஐ-167)

கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜூலை 1
தென்கோவை தனிப்பனை ஸ்ரீவீரபத்திர சுவாமி ஆலய ஜீர்ணோத்தார பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம் இன்று வியாழக்கிழமை 10.40 மணி முதல் 11.10 மணி வரை நடைபெறவுள்ளது. (க)

★ ★ ★

கொக்குவில், ஜூலை. 1
குப்பிளான் சொக்கவளவு சோதி விநாயகப் பெருமான் ஆலய மகா கும்பாபிஷேகம் இன்று வியாழக்கிழமை காலை 9.15 மணிக்கு நடைபெறவுள்ளது. (க-69)

★ ★ ★

மானிப்பாய், ஜூலை 1
இளவாலை ஒல்லுடை ஞான வைரவர் ஆலய மகா கும்பாபிஷேகம் இன்று வியாழன் காலை 9.14 மணிக்கு பிரதம குரு சிவஸ்ரீ இராம பாலச்சந்திரக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது. (க-90)

ஒரே நாளில் மூவரை விசர் நாய் கடித்தது

நெல்லியடி, ஜூலை 1
வடமராட்சி கிழக்கு குடத்தனைப் பகுதியில் ஒரே நாளில் மூவர் விசர் நாயினால் கடியுண்டனர்.

குடத்தனை வடக்கில் வசிக்கும், சண்முகதாஸ் தவமணி (வயது 33) குடத்தனை தபாற் கந்தோரடியைச் சேர்ந்த, கிருஷ்ணதாஸ் மகிந்தன் (வயது 8) இதே இடத்திலுள்ள, அ. உசாந்தி [வயது 11] ஆகிய மூவருமே கடந்த வாரம் ஒரே நாளில் விசர் நாயினால் கடியுண்டு மந்திகை மருத்துவ மனையில் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இதே வேளை—

இப் பகுதியில் வசித்து வந்த க. முருகேசு [வயது 49] என்பவரும், கடந்த வாரம் விசர் நாயினால் கடியுண்டு, மந்திகை மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவ மனைக்கு அனுப்பி வைக்கப்பட்டு அங்கு மரணமாகியுள்ளார். இவர் தகுந்த சிகிச்சை பெறத் தவறியமையே மரணத்துக்கு காரணமெனத் தெரிய வருகின்றது. [ஐ-109]

சைக்கிள் உரிமத் தகடு விநியோகம்

வேலணை, ஜூலை 1
வேலணை பிரதேச சபையினால் 1999ஆம் ஆண்டுக்கான சைக்கிள் உரிமத் தகடுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

சைக்கிள் உரிமையாளர்கள் உரிமத்தகட்டினை பெற்றுக் கொள்ளுமாறு வேலணை பிரதேச சபைத் தலைவர் தெரிவித்துள்ளார். [ஐ-167]

நல்வாழ்த்துக்கள்

யாழ். புனிதமரியாள் வித்தியாலயத்தில் பல்லாண்டுகள் பிரதி அதிபராயிருந்து கல்விப்பணியாற்றி இன்று ஓய்வுபெறும்

திருமதி
நாகேஸ்வரி ஹென்றி வில்லியம்ஸ்
(S. L. P. S. 2,II)

அவர்களுக்கு எம் நல்வாழ்த்துகளைத் தெரிவிப்பதோடு நற்சுகத்தோடு வாழ இறைவனை இறைஞ்சுகின்றோம்.

உறவினர்கள்.

வட்டுக்கோட்டை. (சி/8046)

விற்பனைக்கு

2" அல்கத்தீன் பைப், 1000 கேர் இரும்பு பைப் (250 அடிக்கு உட்பட்ட) விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
K. B. பாலன் குறூப்
பாலன் இரும்பு விற்பனை நிலையம்,
261, கஸ்தூரியார் வீதி, கல்வாதிட்டி சந்தி,
(மக்கள் வங்கி முன்பாக)
யாழ்ப்பாணம். (67029)

மகிமை மிகு இராமாவில் கந்தன்

மாஞ்சோலை சூழ் இராமாவிலில்
சாலையோரம் வீற்றிருக்கும்
மகிமை மிகு கந்தனே
ஆறுமுகக் கோபுரம் ஜொலிக்க
திருமகளும் சண்டேஸ்வரரும்
இனிதருகே தம்குடில் அமர
பக்தர்கள் பரவசத்தில் பாவிசைக்க
நீ நித்தமும் காத்திட வேண்டும்.

— மீசாலையூர் கமலா

இன்று மீசாலை வடக்கு
இராமாவில் கந்தன் ஆலயத்தில்
அமைக்கப் பெற்ற
மகாலட்சுமி தேவியினதும்
சண்டேஸ்வரப் பெருமானதும்
மகா கும்பாபிஷேக விழா

தரம் மிக்க கலர், கறுப்பு - வெள்ளை படப்பிடிப்புக்கு:
கங்கா போட்டோ.
கோண்டாவில், மீசாலை. (66997)

வரதர் - 75 பவள விழா

இன்று 75 வயது நிறைவு பெற்று பவளவிழாக்காணும் எங்கள் மூத்த எழுத்தாளர் வரதர் அவர்களுக்கு எங்கள் மனம்நிறைந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

(67033) - இலக்கிய நண்பர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A L 2000
A L 2001

LOGIC

பிரத்தியேக வகுப்புகள்!

எஸ். எஸ். மனோகரன்

- 40 மாணவர்களே அனுமதிக்கப்படுவர்.
- 2000 மாணவர்களுக்கு பகுதி I உம் II உம் சம காலத்தில் கற்பிக்கப்படும்.
- ஆரம்பம்: 3 - 7 - 99 சனி மாலை 5 மணி

11, குருசோ வீதி, யாழ்ப்பாணம்.
[ஆசனக்கோவிலுக்கு அருகில்] [66970]

விற்பனைக்கு

குளிர்சாதனப் பெட்டிக்கான யுனீற்செற்–காஸ் சிலிண்டர்
ஐஸ்கோன், தும்பினாலான கால்மிதி,
3KV தைனமோ, பிளாஸ்டிக் தும்பு, கோழித்தீன் வகைகள்,
மாட்டுத்தீன் வகைகள், அப்பிள், ஒரேஞ்
என்பன விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: **நாதன் ஸ்ரோர்ஸ்**
213C, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(67017)

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்

பகுதி – D

கருத்தரங்கு தொடர் - I

"கார்கில் பிரச்சினையும், இந்திய நிலைப்பாடும்"
கலாநிதி S K. S. நாதன்
புவியியற்றுறை மண்டபம், யாழ். பல்கலைக்கழகம்
02—07—1999 பிற்பகல் 3.00 மணி

ஆர்வலர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

V. P. சிவநாதன்
செயலர் பகுதி - D

(சி/ 8032)

கண்ணீர் அஞ்சலி

வைத்திய கலாநிதி

பொ. சொர்ணலிங்கம்

M. B. B. S. (Cey), L. R. C. P. (Lond) MRCS (Eng)MRCP (U.K)

அவர்களின் திடீர் மறைவையிட்டு அவரது குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

பிரதான முகாமையாளர்,
~~சக ஊழியர்கள்,~~
இலங்கை வங்கி
மேற்தரக்கிளை,
யாழ்ப்பாணம்.

(67048)

13 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 23 — 10 — 1926

உதிர்வு 01 — 07 — 1986

உயர்திரு. சி. அழகரத்தினம்

(ஓய்வு பெற்ற பிரதம தபால் அதிபர்)

பொட்டிழந்து பூவிழந்து பொற்றாலி தானிழந்து
விதவை என்னும் பெயரிட்டீர் — ஐயா
உங்கள் கோலத் திருமுகத்தை எப்போ
காண்பேனோ?

— மனைவி —

கண்போல் எமைக்காத்த தந்தையே
மண்மேல் மகிழ்வுற வாழச் செய்தீர்
தலைவன் தனை இழந்து தத்தளிக்கும் கலம் போல்
அலை சேர் கண்ணீர்க் கடலில் எமைத்
தத்தளிக்க விட்டீர்களே அப்பா!

— மைந்தர்கள் —

சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

பயணிகள் தரிப்பிடம்

உரும்பிராய், ஜூலை 1

உரும்பிராய் இந்துக் கல்லூரி முன்றலில் பலாலி வீதியில் அமைக்கப்பட்ட பேருந்து பயணிகள் தரிப்பிடம் இன்று நண்பகல் 11.30 மணிக்கு பொதுமக்கள் பாவனைக்குத் திறந்து விடப்பட்டுள்ளது.

உரும்பிராய் வடக்கு இந்துக் கல்லூரி வீதியைச் சேர்ந்த கந்தையா சுப்பிரமணியம் இத்தரிப்பிடத்தைத் தமது செலவில் அமைத்துள்ளார். சுமார் 40 ஆயிரம் ரூபா செலவில் இது அமைக்கப்பட்டுள்ளது.

(ஐ–154)

நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூலை 1

யாழ். பல்கலைக்கழக வணிகத் துறை விரிவுரையாளர் தி. வேல்நம்பியின் 'கிரயக் கணக்கியலும், முகாமைக் கணக்கியலும்' எனும் நூலின் வெளியீட்டு விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

(க)

செயலகத்தில் ஜெனரேற்றருக்கு பாதுகாப்பு

நவாலி, ஜூலை 1

யாழ். செயலகத்தில் இயங்கிவரும் மின் விநியோக ஜெனரேற்றருக்கு இராணுவத்தினரால் கடந்த ஞாயிறு முதல் பாதுகாப்பு வழங்கப்பட்டு வருகின்றது.

(ஐ–100)

தேவை

கணக்கியல், கணக்காய்வு பகுதிக்கு லிகிதர் பதவிக்கு ஆள்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளார்கள்.

இது தொடர்பாக 1 ஆம், 2 ஆம் திகதிகளில் சமுகம் தரவும்.

சம்பள விபரம் நேரில்.

இல.140, பலாலிவீதி,
திருநெல்வேலி.
[பரமேஸ்வரா சந்தி]
[67051]

கண்ணீர் அஞ்சலி

அமரர்

அருளப்பு பிலிப்பையா

[இளைப்பாறிய ஆசிரியர்]

எம் பள்ளிதனில் நல்லாசானாய்ப் பணியாற்றி
கம்பீரமாய் நடைபயின்று கணீரென்ற குரல்காட்டி
மாணவரை நல்வழி காட்டி நின்றவரே — நீர்
இறைபதம் அடைந்த செய்தி கேட்டு
அதிர்ச்சி அடைந்து விட்டோம்.

உம் இழப்பால் துயருறும் நாம்
எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/ புனிதர் சாள்ஸ் ம. வி.,
பிரதான வீதி,
யாழ்ப்பாணம். (67044)

31- ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

பிறப்பு 1935 — 10 — 29

இறப்பு 1999 — 06 — 01

அமரர் கணபதி இராசரத்தினம்

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய் இருந்து எம்மைப் பாசத்துடன் வழிநடத்திய அன்புத் தெய்வமே! உங்கள் புன்முறுவல் பூத்த முகத்தை நாம் இனிக் காண்பதெங்கே? எமது வாழ்வைச் சிறப்பிக்க வழியைக் காட்டிய ஐயா... உங்கள் ஆத்மா சாந்தியடைய தில்லையம்பதியானை வேண்டி நிற்கின்றோம்.

அன்னாரின் வீட்டுக்கிரியை 99 — 07 — 01 இன்று வியாழக்கிழமை முற்பகல் எமது இல்லத்தில் நடைபெறும். இக்கிரியையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் பங்குபற்றுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சோழன் தோட்டம்,
உரும்பிராய் மேற்கு. (67020)

நினைவஞ்சலி

39 ஆம் ஆண்டு — 9 ஆம் ஆண்டு



அமரர்
நாகலிங்கம் திருஞானசம்பந்தர்
(முன்னாள் ஆசிரியர், மீசாலை வீரசிங்கம் சைவ வித்தியாசாலை)
தோற்றம்: 22 – 07 – 1913
மறைவு: 02 – 07 – 1960

திருமதி
திருஞானசம்பந்தர் யோகாம்பிகை
(இளைப்பாறிய ஆசிரியை மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்)
தோற்றம்: 23 – 08 – 1920
மறைவு: 01 – 07 – 1990

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்.
[சி/8047]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

வேலை வாய்ப்பில் நீதிமுறை தேவை

அரசாங்கத் திணைக்களங்கள் மற்றும் அரச நிறுவனங்களில் வேலைவாய்ப்பு வழங்குவதில் உள்ள இனவிகிதாசார முறையை ஒழிப்பதற்கு அரசாங்கம் முன்வந்திருக்கிறது. இது வரவேற்கத் தக்கதாகும்.

மிக உன்னிப்பாக ஆராய்ந்தால், அரச துறைகளில் வேலை வாய்ப்பு வழங்குவதில் தமிழர்களுக்கு நீதி வழங்கப்படாமையும் இன்றைய போர் உண்டாகுவதற்கான காரணிகளில் ஒன்றாகும்.

வேலை வழங்குவதில் திறமைக்கு முதலிடம் கொடுக்காமல் இனவிகிதாசார முறை கொண்டு வரப்பட்டதால் அரசாங்கத் துறைகளில் தமிழர்கள் வேலைவாய்ப்புப் பெறும் வாய்ப்புக் குறைந்து போயிற்று.

வேலைவாய்ப்பில் சமவாய்ப்பு என்ற நிலைக்கு இனவிகிதாசார முறைமுற்றிலும் முரணானதாக இருந்தது. இதனைக் கருத்திற் கொண்டு சிலர் தாக்கல் செய்த வழக்குகளில் இனவிகிதாசார அடிப்படையில் வேலைவாய்ப்பு வழங்குவது நீதிக்குப் புறம்பானது எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

அது அரசாங்கத்தின் நெஞ்சைக் குறுகுறுக்கச் செய்திருக்க வேண்டும். அதன் விளைவே இனவிகிதாசார அடிப்படையில் வேலைவாய்ப்பு வழங்கும் முறையை இல்லா தொழிப்பது என்ற அரசின் இப்போதைய உத்தேசம்.

இது சம்பந்தமாக அமைச்சரவைக்கு அறிக்கை சமர்ப்பித்த பொது நிர்வாகத்துறை அமைச்சர் இரத்தினசிறி விக்கிரமநாயக்கா, இனவிகிதாசார முறை நிறுத்தப்பட்டால் அதற்குப் பதிலான மாற்றுத் திட்டம் எது என்பதனைத் தெரிவிக்கவில்லை.

புதிய மாற்றுத் திட்டம் குறித்து உயர் மட்டக்குழு ஒன்று ஆராய வேண்டும் எனவும் அது சம்பந்தமான திட்டம் கிடைத்த பின்னர் நடை முறையில் உள்ள திட்டத்தை ரத்துச் செய்யலாம் என்றும் அமைச்சரவையில் ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

வேலைவாய்ப்பு மிகவும் பிரதானமான அம்சம். வேலையில்லாப் பிரச்சினை உரிய முறையில் கையாளப்படாததால் தெற்கில் இளைஞர் கிளர்ச்சி வெடித்தது என்பதனை மறந்துவிடலாகாது. தொழில் மூலம் தான் வாழ்க்கைக்குத் தேவையான வருமானம் தேடப்படுகிறது. தொழில் இல்லையென்றால் வாழ்க்கையே முடங்கிப் போய்விடும். அது நாட்டில் மக்களிடத்தில் பல வகையான பாதிப்புகளை உண்டாக்கும்.

எனவே புதிய மாற்றுத்திட்டம் பெரும்பான்மையினருக்குச் சலுகை அளிப்பதாகவோ அல்லது அவர்களுக்கு மட்டும் நீதி வழங்குவதாகவோ இல்லாமல் ஏனைய இன மக்களுக்கும் நீதி நல்குவதாக அமைய வேண்டும்.

பிரதேச முன்னுரிமை, திறமை, குடும்பநிலை போன்ற பல்வேறு அம்சங்களையும் கருத்திற் கொண்டு எந்தச் சாராருக்கும் பாதிப்பில்லாத வகையில் மாற்றுத் (புதிய) திட்டம் வகுக்கப்பட வேண்டும். ஒரு சாராருக்கு அளவுக்கு அதிகமான சலுகைகளையும் வசதிகளையும் வழங்கும் எந்தத் திட்டமும் அடுத்த தரப்புகளுக்கு அநீதி விளைவிக்கும்.

ஆகையால், அரசியல் கண்ணோட்டத்தில் அன்றி, பொது நீதி என்ற பரந்த பார்வையுடன் வேலைவாய்ப்பு விடயத்தை அணுக வேண்டும். வயிற்றுப் பசியும், ஜீவனோபாயமும் எல்லோருக்கும் பொதுவானவை. அதனை மனதில் இருத்தி வகுக்கப்படும் திட்டமே நீதியானதாக அமையும்.

கல்வி வலய அமைப்பு முறைக்கு முழுதாக அதிகாரம் பகிரப்படவில்லை

வலயப் பணிப்பாளர் மனக்குறை

நல்லூர், ஜூலை 1

நிர்வாகப்பரவல் என்ற ரீதியில் வலயங்கள் ஏற்படுத்தப்பட்டாலும் அவற்றுக்குப் போதியளவு அதிகாரமும் இல்லை. மாகாண மட்டத்தில் உள்ளவர்கள் அதிகாரங்களைத் தம்முடன் வைத்திருக்கவே விரும்புகிறார்கள். முன்பு மாவட்டக் கல்வி அலுவலகம் இருந்த போது தேவைகளைக் கணிசமான அளவு நிறைவேற்றக் கூடிய அதிகாரம் இருந்தது. இப்போது அது இல்லை. நிதி உட்பட ஏனைய விடயங்களை நிறைவேற்ற மாகாண அதிகாரிகளின் தயவையே எதிர்பார்க்க வேண்டியுள்ளதால் இந்த நிர்வாகப் பரவலாக்கல் பயனற்றதாகவுள்ளது.

இவ்வாறு 'கல்வி நிர்வாகம்' நூல் அரங்கேற்ற விழாவில் பதிலுரை வழங்கிய யாழ். வலய கல்விப் பணிப்பாளரும் நூலாசிரியருமான கலாநிதி நா. தணிகாசலம் பிள்ளை கூறினார்.

'கல்வி நிர்வாகம்' நூல் அரங்கேற்ற விழா யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் கைலாசபதி கலை அரங்கில் நடைபெற்றது.

கலாநிதி தணிகாசலம் பிள்ளை மேலும் பேசும்போது கூறியதாவது:–

ஒரு பாடசாலையின் வளர்ச்சித் திட்டமுகாமையில் தங்கியுள்ளது. அதிகாரப் பரவலாக்கல் தேவை என்று கூறுபவர்கள் அதிகாரத்திற்கு வந்ததும் அதை மறந்து விடுகிறார்கள். நிர்வாகப் பரவலாக்கல் அவசியம். நிர்வாக சுதந்திரம் இருக்க வேண்டும் என்று விரும்புபவன் நான். இந்த நூலைப் படிப்பவர்கள் யதார்த்த நிலை என்ன என்பதைப் புரிந்து கொள்ள முடியும். எனது பட்டறிவு இந்த நூலை எழுத உதவியது. கல்வி நிர்வாகத்துறையில் எனக்கு ஆர்வத்தை ஏற்படுத்தியவர் பேராசிரியர் சந்திரசேகரம் அவர்களே—என்று தெரிவித்தார்.

துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை தமது தலைமையுரையில் கூறியதாவது:–

கல்வியும் கல்வி நிர்வாகமும் இன்று சர்வதேச முக்கியத்துவம்வாய்ந்தது ஒருநாட்டில் என்ன பிரச்சினை எழுந்தாலும் அதற்கு சரியான கல்விக் கொள்கை இன்மையே காரணமாகும்.

பொன் நகரில் சமீபத்தில் பல நாடுகள் இணைந்த கூட்டத்தில் கல்வி சம்பந்தமான விடயம் முக்கியமாக ஆராயப்பட்டது. சகலருக்கும் கல்வி; வாழ்நாள் முழுவதும் கல்வி; தரமான கல்வி என்பதே இப்போதைய இலக்காகும். இந்த இலக்கை அடைய கல்வி நிர்வாகம் தேவை.

இன்று முழுமையான கல்வி நிர்வாகம் இல்லை. இன்றைய கல்வியைப் பொறுத்தவரை மலிவான —விடயமில்லாத— நிர்வாகம் காணப்படுகிறது. இந்த நாட்டில் பத்தாயிரம் பாடசாலைகள் உள்ளன. ஒரு பாடசாலையில் ஏழாயிரம் மாணவர்களும் இன்னொன்றில் ஏழு மாணவர்களும் உள்ளனர். இந்த வேற்றுமைகளைக், களைந்து வளங்களைப் பகிர்வதில் உள்ள சிக்கல்களைத் தீர்க்க கல்வி நிர்வாகம் தேவை.

நூலாசிரியர் பல பட்டங்கள் பெற்றவர். அவரது கல்வித் தகைமை, பட்டறிவு, எழுத்தாற்றல் என்பவற்றினால் இதனை எழுதியுள்ளார். மிகச் சிறந்த கல்வி நிர்வாகத்தை ஆசிரியர்களும் கல்வித்துறை சார்ந்தவர்களும் அறியக்கூடியதாக நூல் அமைந்துள்ளது — என்றார்.

கல்வியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சபா ஜெயராசா தமது மதிப்பீட்டுரையில் கூறியதாவது:

எங்கள் மத்தியில் நூல் அறிமுகம் குறைவாகவே உள்ளது. சிங்கள மக்களிடம் வாசிக்கின்ற பண்பாடு வளர்ந்து வருகிறது, அதாவது புத்தகக் கலாசாரம் ஒன்று புதிய வேகத்துடன் வளர்கிறது.

சில நாடுகளில் கற்றல், கற்பித்தல் என்று கூறப்படும் கல்வி நிர்வாகம் ஒவ்வொரு மனிதனுடைய அறிவியல் சமூக, மன ஆன்மீகவிருத்தியென்பதை முன்னெடுப்பதாக இருப்பதால் மனிதனை வளர்த்தெடுக்கும் ஒரு துறையாக இது அமைகிறது.

1972 இல் புதிய கல்வித் திட்டம் உருவாக்கப்பட்ட போது கல்வி நிர்வாகம் தனித்துவம் என்பதால் சில அதிகாரிகளுக்கு அன்று பயிற்சிகள் வழங்கப்பட்டன.

போலே புறேடி கூறியது போன்று எமது கல்வி முறையும் ஒதுக்கப்பட்டவர்களுக்கு கல்வி ஒதுக்கல் உள்ளதாகவே இருந்தது. பல்கலைக்கழகத்தில் உள்ளவர்களுக்கு புலமைச் சுதந்திரம் உண்டு. நிர்வாகத்தில் இருந்து கொண்டு அதன் குறைபாடுகளை எடுத்துக்கூறுவது இடர்பாடாகும்.

இந்தியா கல்வியில் வளர்ந்த நாடு— திட்டமிடாத கல்வி சமூக ஒட்டுண்ணிகளை உருவாக்கும். எனவே திட்டமிடல் வேண்டும். அங்கே விஞ்ஞான, தொழிநுட்ப கல்விகள் குறித்து நன்கு திட்டமிடப்படுகிறது.

முகாமைத்துவம், கல்வி நிறுவனக் கட்டமைப்பு, நிர்வாகப் பரவலாக்கல் என்பன எத்தகைய முறையில் செயற்படுகின்றன என்பதும் நவீன முகாமைத்துவம் பற்றிய பண்பு, கல்வி நிர்வாகம் பற்றிய பகுப்பாய்வுகள் குறித்து நூலில் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

நிர்வாகத்திற்கான செலவு வேகமாக அதிகரிக்கிறது. ஆனால் வினையாற்றல்வீழ்ச்சியடைகிறது. இதை ஈடுசெய்ய மகாநாடுகள். பயிற்சிப் பட்டறைகள் ஏற்படுத்தப்பட வேண்டும். மேற்பார்வை ஆசிரியனைக் குறை கூறுவதாக இல்லாமல் அவனது பிரச்சினைகளை உள்ளாய்வதாக இருத்தல் வேண்டும். எவ்வாறான துலங்கல்களை ஆசிரியர்கள் வெளிப்படுத்துகிறார்கள் என்பது குறித்த கருத்தும் நூலில் உள்ளது. நிர்வாக பரவலாக்கலின் அவசியம், கல்வி நிர்வாகம் குறித்த ஆழமான அறிவை இதனூடாகப் பெறமுடியும்— என்றார்.

யாழ். அரசாங்க அதிபர் க. சண்முகநாதன் பேசும் போது கூறியதாவது:-

கல்வி ஆரம்பத்தில் இருந்து வரவேண்டியது. கல்வி நிர்வாகம். வேறு, ஏனைய நிர்வாகங்கள் வேறு பெண்கள் படிக்க வேண்டியதன் முக்கியத்துவம் பற்றிக் கூறப்பட்டது. இன்னும் சில வருடங்களில் செயலக நிர்வாகத்தில் பெண்களே கூடுதலாக நிர்வாகத் தரத்தில் அமரக் கூடிய நிலை உண்டு.

கல்வி நிர்வாகம் தொடர்பான தணிகாசலம் அவர்களின் முயற்சி மேலும் விரிவடையவேண்டும்— என்றார்.

யாழ். பல்கலைக்கழக பட்ட ஆய்வுப் பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ் தமது உரையில் கூறியதாவது:–

ஒரு கல்வி அதிகாரி இது போன்ற நூலை வெளியிடுவது ஆசிரியர்களுக்குப் பயனுள்ளது. இன்று எல்லாப் பல்கலைக்கழகங்களிலும் முகாமைத்துவ பீடம் பெரிய பீடமாக உள்ளது எமது மண்ணில் கல்வியில் நாங்கள் பின்னடைந்து விடுவோமோ என்ற நிலையில் அதனை முன்னெடுக்கப் பலர் உதவுகின்றனர்.

இப்போது இளைஞர்கள் உயர்மட்டத்தில் வந்து கொண்டிருக்கிறார்கள். சரியான அறிவு, முயற்சி, துடிப்புக்கு முன்னுரிமை கிடைக்கிறது. இவர்கள் அதிகாரத்தை முன்நிலைப்படுத்த இது போன்ற நூல்கள் எழுதப்பட வேண்டும். இளம் அதிபர்கள், ஆசிரியர்கள் அதிகாரபீடத்திற்கு வரும்போது இந்த நூல் உதவியாக இருக்கும் — என்றார்.

யாழ். பல்கலைக்கழக கல்வியியற்றுறைத் தலைவர் பேராசிரியர் எஸ். ஆறுமுகம் பேசும்போது கூறியதாவது:

எனது மாணவர் தணிகாசலம்பிள்ளை கல்வித்துறையில் யாழ். மாவட்ட இணைப்பாளராகவும் யாழ், வலயப் பணிப்பாளராகவும் இருந்து கொண்டு இந்த நூலை வெளியிட்டுள்ளார்.

கல்வித்துறையில் உள்ளவர்கள் நாட்டின் முன்னேற்றத்திற்கும் எதிர்காலத்தின் நிலையான பயனுக்கும் ஏற்ப செயற்பட வேண்டும். இதற்கு கல்வி நிர்வாகத்தை அம்சமாகக் கொண்ட நூல்கள் கல்வி உலகிற்கு அவசியமாகும். கல்வி நிர்வாகத்தின் சகல மட்டங்களிலும் தேவையான அறிவைப் பெற்றவர்— இந்த நூலை ஆக்கத் தகுதியானவர் — என்பதால் அவரை வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றேன் — என்றார்.

நூலின் முதற்பிரதியை பேராசிரியர் ஆறுமுகத்திடம் இருந்து யாழ். அரச அதிபர் சண்முகநாதன் பெற்றுக் கொண்டார்.

நூலாசிரியர் தணிகாசலம் பிள்ளையை பேராசிரியர் ஆறுமுகம் பொன்னாடை போர்த்துக் கௌரவித்தார்.

(ஐ-103)

வரதருக்கு வயது 75

யாழ்ப்பாணம், ஜூலை 1

பிரபல மூத்த எழுத்தாளர் வரதரின்(தி. ச. வரதராசன்) 75 ஆவது பிறந்த நாள் இன்றாகும்.

பவள விழாக்காணும் மூத்த எழுத்தாளர் பற்றிய உரை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ச் சேவையில் இன்று விபாழக்கிழமை மாலை 6.20 மணிக்கு ஒலிபரப்பப்படவுள்ளது.

'பெண்ணின் குரல்' சஞ்சிகையின் ஆசிரியர் எழுத்தாளர் பத்மா சோமகாந்தன் இச் சிறப்புரையை நிகழ்த்துவார்.

[அ-க]

நாளை

ஆனி 18

வெள்ளிக்கிழமை

திதி: திருதியை

காலை 6.19 வரை

நட்சத்திரம்: திருவோணம்

முற்பகல்: 9.21 வரை.

சங்கடஹர சதுர்த்தி விரதம்

சுபநேரம்: 5.56—7.26

ராகுகாலம்: 10.26—11.56

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

உதயவாக்கு

ஆளும் திறனும் அன்பும் இல்லாத அரசாட்சி பயனற்றது.

குமரகுருபரர்

சாயி சிந்தனை

ஒரு மாணவன் தன் படிப்பை முடித்துக் கொண்டு வீட்டுக்குச் சென்றான். பெற்றோர்கள் அவனைத் திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தினார்கள். அவனும் உற்சாகத்துடன் சம்மதம் தெரிவித்து, திருமணம் நடந்தது. இருகால்கள் உள்ள அவன், திருமணத்துக்குப்பின், மனைவி கூடச்சேர, நாலு கால் விலங்கானான். அவனது சுதந்திரம் தடைப்பட்டது. மனைவியைப் பராமரிக்கும் பொறுப்பு அவனுக்கு ஏற்பட்டது. இரண்டு ஆண்டுகளுக்குப் பின் அவனுக்கு ஒரு மகன் பிறந்தான். இப்போது தேள் போல அவனுக்கு ஆறு கால்களாயிற்று. பிறகு அவனுக்கு ஒரு மகள் பிறந்தாள். கரப்பான் பூச்சி போல அவனுக்கு எட்டுக் கால்களாயின. அவனது கட்டுகள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன.

உனது தளைகளுக்குக் காரணம் நீயே தவிர, கடவுளல்ல. கடவுள் நீக்கமற நிறைந்திருக்கிறார் என்ற உணர்வு உனக்கு இருக்க வேண்டும். உனது சுமைகளை இறைவனிடம் ஒப்படைக்கும் போது. உனது மனம் இலேசாகிறது — நீ சுமக்கும் சுமையும் குறைகிறது. அனைத்துச் சுமைகளையும் உடனே குறைப்பதற்குப் பதிலாக, சிறிது சிறிதாக நம் சுமைகளை நாம் குறைத்துக் கொள்ளலாம். இறைவனுடன் நமக்குள்ள தொடர்பை அதிகரித்துக் கொள்ள வேண்டும். உலகத்துடன் நமக்குள்ள தொடர்பைக் குறைத்துக் கொள்ள வேண்டும்.

(ஆதாரம்: சாயி அருளமுதம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரசாலை - இலந்தைத்திடல்

அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் ஆலய மஹாகும்பாபிஷேக விழா சிறப்புமலர்

கும்பாபிஷேக தினம்: பிரமாதி வருஷ ஆனித்திங்கள் 17 ஆம் நாள் (01 – 07 – 99) வியாழன்
சுபமுகூர்த்தம்: பகல் 10.02 முதல் 11. 14 வரையுள்ள சிங்க லக்னம்.

பிரதம சிவாச்சாரியார் அருளாசி

எங்கும் வியாபகமாய் இருந்து அகில உலகத்தையும் இயக்குகின்ற அன்னை பராசக்தி, ஸ்ரீவீரமாகாளி என்னும் திருநாமத்துடன் சரசாலை இலந்தைத்திடல் திவ்விய கோத்திரத்தில் உருவத் திருமேனி கொண்டு எழுந்தருளி தம்மை வழிபடுகின்ற அடியார்களுக்கெல்லாம் துயர்துடைத்து திருவருள் சுரந்து கொண்டு வீற்றிருக்கின்றாள். இவ்வாலயம் கடந்த 1985 ஆம் ஆண்டு ஆனித் திருவோணத்தன்று மகாகும்பாபிஷேகம் நடைபெற்று நித்திய, நைமித்தியங்கள் யாவும் அடியார்களின் உதவியுடன் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

ஆலயத்திலே மிகுதியாக இருந்த திருப்பணிகளை நம் நாட்டு மக்கள் வாரிவழங்கி நிறைவேற்றி இன்றைய தினம் ஆனித் திருவோணத்தில் புனராவர்த்தன கும்பாபிஷேகத்தைத் தரிசித்து காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கிப் பரவசமடைகிறார்கள். இது அம்பாள் மீது மக்கள் கொண்டிருக்கும் பக்தியை எடுத்துக் காட்டுகின்றது.

இன்று ஆலயம் புதுப்பொலிவு பெற்று விளங்குகின்றது. கருணைக் கடலாகிய தேவியின் திருவருளை இத்தன்மைத்து என்று எவராலும் அளவிட முடியாது. நாட்டில் எத்தனையோ அனர்த்தங்கள் ஏற்பட்ட காலத்திலும் அபயமளித்தது அம்பிகையின் திருவருள் தான் என்று கூறுவதில் மிகை ஒன்றுமில்லை.

மிகுதியாக உள்ள இராஜகோபுர திருப்பணியும் விரைவில் நிறைவு பெற்று நித்திய நைமித்தியங்கள் குறைவில்லாமல் நடந்து நாட்டு மக்கள் சகல ஐஸ்வர்யங்களையும் பெற்று அமைதியான நிறைவான வாழ்வு வாழ எல்லாம் வல்ல அம்பிகையின் திருப்பாதாரவிந்தங்களை வழுத்தி எல்லோருக்கும் திருவருள் கிடைக்கப் பிரார்த்தித்து நல்லாசி கூறி அமைகின்றேன்.

''லோகா ஸமஸ்தா ஸுகினோ பவந்து''

சி. சிதம்பரநாதக்குருக்கள்

பயிரவி பஞ்சமி பாசாங்குசை பஞ்சபாணி வஞ்சர்
உயிர்அவி உண்ணும் உயர்சண்டிகாளி ஒளிநம் கலா
வயிரவி மண்டவி மாலினி சூலி வராகி என்றே
செயிர் அவி நான்மறைசேர் திருநாமங்கள் செப்புவரே

இந்து நாகரிகத்துறைத் தலைவர் ஆசியுரை

இவ்வுலக இயக்கத்திற்கு அம்பிகையின் அருளாற்றலே மூலகாரணம். அவளது சக்தி எங்கும் நீக்கமற நிறைந்து அருள்ாட்சி செய்கின்றது. 'யாதுமாகி நின்றாய் காளி எங்கும் நீ நிறைந்தாய்' எனப் போற்றித்துதிக்கும் வகையில் எமது பிரதேசத்தில் எழுச்சிபெற்ற ஆலயங்களில் ஒன்றாக அமைவது சாவகச்சேரி, சரசாலையில் உள்ள இலந்தைத்திடல் என்ற தலத்தில் உள்ள ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் ஆலயமாகும். ஆன்றோர் பலரின் அரிய முயற்சியினால் உருவாகிய இவ்வாலயத்தில் 1985 ஆம் ஆண்டு நிகழ்ந்த மகாகும்பாபிஷேகத்தை யடுத்து சிவாச்சாரியர், அறங்காவலர் திருப்பணிச்சபையினர், அம்பிகை அடியார்கள் ஆகிய அனைவரும் ஒன்றிணைந்து ஆற்றிய அரிய முயற்சியின் பயனாய் திருப்பணிகள் நிறைவேறி, ஆலயம் புதுப்பொலிவு பெற்று மகாகும்பாபிஷேகம் நிகழ்வது சிறந்த உத்தமோத்தமமான புண்ணியச் செயலாகும். இவ்வாலய வரலாற்றில் இது மற்றுமொரு சிறப்பம்சமாகும். ஆலயத்தில் நிகழும் விஸ்தாரமான கும்பாபிஷேகக்கிரியைகளினால் அம்பிகையின் சாந்நித்தியம் மேன்மை பெறுவதாகுக! இப்புண்ணிய வேளையில் அவளது அருளாற்றலால் எம்மைச் சூழ்ந்துள்ள இன்னல்கள் நீங்கி எங்கும் இன்பம் சூழ்வதாகுக! ஆலயத்தில் நித்திய நைமித்திகங்கள் குறைவற நிறைவேறி ஆலயம் பொலிவு பெற்றுவிளங்குவதாகுக! அடியார்கள் அனைவரும் இக் கும்பாபிஷேக நன்னாளில் அம்பிகையின் திருவருளைப் பெற்று சீரும் சிறப்புடன் வாழ எம் இனிய வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

காளிமீது நெஞ்சம் என்றும் கலந்து நிற்க
வேண்டும்
வேளையொத்த விறலும் பாரில் வேந்த
ரேத்து புகழும்
வளியொத்த வளியும் என்று இன்பம்
நிற்கும் மனமும்
வாழியீதல் வேண்டும் அன்னாய் வாழ்க
நின்றன் அருளே

என்ற பாரதியின் வாக்கு இப்புண்ணிய நாளில் எமது சிந்தையில் உறுதிபெறுவதாகுக!

பேராசிரியர் கலாநிதி
ப. கோபாலகிருஷ்ண ஐயர்
தலைவர் இந்து நாகரிகத்துறை
யாழ் பல்கலைக்கழகம்.

கும்பாபிஷேக சபைச் செயலாளரின் அன்புரை

18 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் கனவான் கதிரவேலு அவர்கள் தில்லைக் காளியின் திவ்விய சொரூபம் ஒன்றைச் சிதம்பரத்தால் வரும்போது இங்கு கொண்டு வந்தார். தன் காணியில் அமைந்த ஒரு புனித நாவல் மரத்தடியில் வைத்தார். சிறு குடில் அமைத்தார். அல்லும் பகலும் பூசித்தார். காலாந்தரத்தில் அவர் வழித் தோன்றல் உயர் திரு. ச. பொன்னுச்சாமி வைரக் கற்களால் கற்பக்கிரகம், அர்த்தமண்டபம், மணிக்கூட்டுக்கோபுரம், இராசகோபுர அத்திவாரம் என்பனவும் வசந்தமண்டபம், மடைப்பள்ளி என்பனவும் அமைத்தார். கும்பாபிடேகம் பூசை என்பன ஊர் அன்பர்களோடு செய்து பூசித்தனர். கடந்த கும்பாபிடேகத்தின் போது விநாயகர், முருகன், தில்லைக் காளி ஆகியோருக்குத் தனித் தனிக் கோயில்களும், வசந்தமண்டபம் வியாபித்தலும் சுற்றுமதிலும் அமைந்தன.

இன்று சுற்றுமதில் உயர்ந்தது, சுற்றுக் கொட்டகை அமைந்தது. உள்ளதி முழுவதும் சிமெந்தினால் செப்பனிடப்பட்டது. தூபிகள், சுவர்கள் யாவும் வர்ணப் பூச்சுக்களால் மலிந்தது. இந்த ஆனந்தமான அலங்காரத்தைக் கண்டு அடியார்கள் மனம் பூரிக்கின்றனர். இலந்தைத்திடலான், ஈஸ்வரி, இலம்பைகள் தீர்க்கும் எம்பெருமாட்டி தில்லைக் காளித்தாயே என்று மனமார வாழ்த்தி மனம் உருகுகின்றனர்.

இத்தனைக்கும் எங்கள் பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ சி. சிதம்பரநாதக்குருக்கள் அவர்கள் பங்கு ஆலயச் சரித்திரத்தில் பெரும் பங்காகும். இத்திருப்பணிக்குப் பல அன்பர்கள் உதவினார்கள். உதவிக்கொண்டிருக்கிறார்கள். உதவ எண்ணுகிறார்கள். சமீப காலத்தில் இராசகோபுரத்தையும் ஓர் அன்பர் குடும்பம் நிறைவேற்றத் தீர்மானித்திருக்கிறது. எல்லா அன்பர்களுக்கும் எம் அன்னை காளியின் திருவருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

சி. வைரவிப்பிள்ளை

துர்க்காதுரந்தரி ஆசியுரை

''யாதுமாகி நின்றாய் காளி எங்கும் நீ
நிறைந்தாய்
தீதுநன்மைபெல்லாம் காளி நெய்வலீலை
அன்றோ.''

என்பது அமரகவி சுப்பிரமணிய பாரதியாரின் அருட்பாடலாகும் முழுஞான மூர்த்தியாகவிளங்கும் காளிதேவிக்கு ஞானபூசை செய்து தன்னை ஒப்புக் கொடுத்தவர் ஸ்ரீராமகிருஷ்ண பரமகம்சர். அன்னையின் அருட்கடாட்சத்தினால் அகில உலகமும் வெற்றியையும், வீரத்தையும், சகல சித்தியையும் பெற்று உய்வு அடைந்தது எமது ஞான பரம்பரை எடுத்துக் காட்டுகிறது

சரசாலை இலந்தைத்திடல் வீரமாகாளி அம்பாளின் குடமுழுக்கு விழா அவ்வூர்ப் பகுதி மக்களின் நிரந்தர அமைதிக்கும் சுபீட்ச வாழ்வுக்கும் வழி காட்டும் என்பதில் ஐயமில்லை. எம்மைச் சூழ்ந்துள்ள துன்பங்கள் அனைத்தும் பரிதியைக் கண்டபனி போல அகன்று விடுவதற்கு வழிபாட்டு மார்க்கமே சிறந்த நெறியாகும். மட்டுவில் தந்த அந்தணர் திலகம் சிவஸ்ரீ சி. சிதம்பரநாதக் குருக்கள் அவர்கள் குடமுழுக்கின் பிரதம சிவாச்சாரியாராக அமர்ந்து கிரியைகள் ஆற்ற இருப்பது மகிழ்ச்சிக்குரிய நிகழ்வாகும். அன்னை வீரமாகாளியின் அருட்பிரவாகம் நடெங்கும் பெருகட்டும்.

அகிலமதில் தோயின்மை, கல்வி, தனம், தானியம், அழகு, புகழ், இளமை, பெருமை, அறிவு, சந்தானம், வலிமை, துணிவு, வாழ்நாள், வெற்றி, ஊழ்நுகர்ச்சி என்ற அனைத்துப் பேறுகளையும் அன்னையின் அடியார்கள் பெற்றுப் பெருவாழ்வு வாழ்வார்களாக என்று அமைகின்றேன்.

துர்க்கா துரந்தரி கலாநிதி
தங்கம்மா அப்பாக்குட்டி

கும்பாபிஷேக சபைப் பொருளாளரின் அன்புரை

ஷ வீரமாகாளி அம்மன் ஆலயம் ஏறத்தாழ இரண்டு நூற்றாண்டுகள் பழைமை வாய்ந்தது. சர்வலோகநாயகி ஆகிய எம் அம்மை வேண்டுவார் வேண்டுவதை ஈந்து கொண்டு எம்மூரில் கோயில் கொண்டருளிக் கொண்டிருக்கிறார். அவனருளாலே அவன் தாள் வணங்கி இன்று அன்பர்கள் பல திருப்பணிகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள்; நிறைவேற்றி இருக்கிறார்கள்.

இன்று ஆலயப் புதுத்தோற்றம், புதுப் பொலிவு பெற்று மிளிர்கிறது. அடியார்களுக்கு பல வசதிகளையும் உடையதாக விளங்குகிறது. இவற்றை நிறைவேற்றப் பல அன்பர்கள் சிரமதானம் மூலமும், பொருள்கள் மூலமும், வாகனங்கள் மூலமும், பணம் மூலமும் உதவி செய்திருக்கிறார்கள். பிரதம சிவாச்சாரியார் மற்றும் நிர்வாக உறுப்பினர்கள் முயற்சி பெருமுயற்சியாகும். எல்லோர்க்கும் காளியின் திருவருள் கிட்டுவதாக!

க. மகேஸ்வரன்
பொருளாளர்

எழிலந்தை திடலமர்ந்தாய் போற்றி!

திருமருவு சரசாலை என்னு மூரில்
திசையெலாம் புகழ் பரவ மகிமையாலே
மருதநில அருகினிலே மகிழ்வி னோடு
மானிலத்தோர் வினைநீங்கி உய்வு காண
உருவுபல வாகிநின்று அருள் சுரந்தாய்
உன்பெருமை சொல்லுநற்கெளியதாமோ
[illegible]
எழிலிலந்தைத் திடலமர்ந்த துர்க்கைதாயே

அகிலமெல்லாம் நிறைந்தவளே போற்றிபோற்றி
அன்பரகத்துறைபவளே போற்றி போற்றி
மகிமைமிகக்கொண்டவளே போற்றி போற்றி
மன்றில்நடம் செய்தவளே போற்றிபோற்றி
திகழரிபில் வருபவளே போற்றி போற்றி
திரிசூலங் கரங்கொண்டாய்போற்றிபோற்றி
இகபரத்தை ஈந்தருள்வாய் போற்றி போற்றி
எழிலிலந்தைத் திடலமர்ந்தாய்
போற்றி போற்றி

— சக்தி பூஷணம் அ. கி. ஏரம்பமூர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண்டை தொடர்வதால் வன்னியில் பெரும் உணவுத் தட்டுப்பாடு அபாயம்

யாழ்ப்பாணம், ஜூலை 1

பாப்பாமோட்டைப் பகுதியில் தொடர்ந்தும் மோதல்கள் இடம்பெற்று வருவதனால் வன்னிப் பகுதிக்கான போக்கு வரத்து தடைப்பட்டுள்ளது.

இதன் காரணமாக இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதியில் பெரும் உணவுத் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் தோன்றியுள்ளது.

இராணுவ கட்டுப்பாடற்ற பகுதிகளுக்கான உணவு விநியோகம் ஏற்கனவே சில மாதங்களாகஒழுங்காக நடைபெறவில்லை. இதன் காரணமாக வன்னிப் பகுதியில் உணவுப் பொருள்கள் தட்டுப்பாடாகவே இருந்து வந்தன. தற்போது போக்குவரத்து தடைப்பட்டுள்ளமையால் நிலைமை மிகவும் மோசமடையலாம் என்று தெரியவருகின்றது.

பாப்பாமோட்டைப் பகுதியில் மோதல்கள் நிறுத்தப்பட்டாலும் இராணுவத்தினரையும் விடுதலைப் புலிகளையும் மீண்டும் இணக்கப்பாடொன்றுக்குக் கொண்டு வருவதன் மூலமே பாதையைத் திறக்க முடியும். அதற்கான முயற்சிகளைத் தாம் மேற்கொள்வதாக வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் கே. கணேஷ் தெரிவித்தார்.

விரைவில் பாதை திறக்கப்பட்டு உணவு விநியோகம் மேற்கொள்ளப்படாவிட்டால் வன்னிப்பகுதியில் பெரும் உணவுத் தட்டுப்பாடு ஏற்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். [ஐ–ரி]

கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 1

யாழ். பல்கலைக்கழகப் புவியியற் கழகத்தின் ஏற்பாட்டில் கருத்தரங்கு ஒன்று இன்று காலை 10 மணிக்கு புவியியற் துறை விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெறும் இந்த கருத்தரங்கில் ''இலங்கையின் வரைபடங்கள்'' என்னும் தலைப்பில் நில அளவைத் திணைக்கள இளைப்பாறிய பணிப்பாளர் நாயகம் கலாநிதி ரி. சோமசேகரம் கருத்துரை வழங்குவார். (இ-3)

சமய சந்நிதிகளில்

வலிகாமம் தெற்கு, ஜூலை 1

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை காட்டுத்துறை ஸ்ரீ அம்பலவாண விக்கினேஸ்வரப் பிள்ளையார் கோயில் வருடாந்த மஹோற்சவம் இன்று வியாழக்கிழமை பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பத்து நாள்களுக்கு நடைபெறும்.

ஜூலை ஐந்தாம் திகதி தண்டிகைத் திருவிழா, எட்டாம் திகதி சப்பரத் திருவிழா ஆகியன நடைபெறும்.

ஜூலை 9 ஆம் திகதி பகல் தேர்த்திருவிழாவும், மறுநாள் காலை தீர்த்தத் திருவிழாவும் நடைபெற்று உற்சவம் பூர்த்தியடையும். [ஐ–152]

★ ★ ★

நல்லூர் ஆடிய பாதம் வீதி அருள் மிகு இராஜராஜேஸ்வரி அம்பாள் [பேச்சி அம்மன்] ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நேற்று பதன்கிழமை ஆரம்பமாகியது. தொடர்ந்து பத்துத் தினங்கள் உற்சவம் நடைபெறவுள்ளது.

இறுதி நாளான எதிர்வரும் 9 ஆம் திகதி பகல் சங்காபிஷேகமும், மாலை திருஊஞ்சலும் விசேட ஆராதனைகளும் இடம்பெற்று அம்பாள் வீதியுலா வருவார். [ஐ[

★ ★ ★

கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலயத்தில் மடு அன்னைத்திருவிழாக் கொண்டாட்டங்கள் இன்றும் நாளையும் நடைபெற விருக்கின்றன.

இன்று மாலை 5 மணிக்கு நற்கருணை ஆராதனையும் நாளை காலை 7 மணிக்கு திருநாள் கூட்டுத் திருப்பலி, திருச்சுரூப ஆசிர் ஆகியனவும் இடம்பெறும். (இ–3)

★ ★ ★

வண்ணை வடமேற்கு ஆறுகால்மடம் மயிலுவீதி நாவலடி ஞான வைரவர் சுவாமி ஆலய பாலஸ்தாபன கும்பாபிஷேகம் இன்று வியாழக்கிழமை காலை 7.55 மணி முதல் 8.25 மணி வரையில் நடைபெறவுள்ளது (இ-க)

★ ★ ★

வண்ணார்பண்ணை ஸ்ரீ விசுவலிங்க மகாகணபதி ஆலயத்தின் மணவாளக் கோலவிழா நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. (இ–க)

சேமிப்புக் கணக்கு அங்குரார்ப்பண வைபவம்

வடமராட்சி, ஜூலை 1

பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கிக் கிளையில் 'பிரார்த்தனா' என்னும் சின்னஞ் சிறுவர்களுக்கான புதிய சேமிப்புக் கணக்கு இன்று வியாழக்கிழமை முகாமையாளர் எஸ். பரமானந்தம் தலைமையில் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்துவைக்கப்படும்.

பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம செயலாளர் சுவாமி சித்ரூபானந்தா இதனை ஆரம்பித்து வைப்பார். (ஐ-173)

மரவேலை தொழிற்பேட்டை திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 1

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மரவேலைத் தொழிற்பேட்டைத் திறப்பு விழா கடந்த 26ஆம் திகதி சனிக்கிழமை யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தர் பொ. பாலசுந்தரம் பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

இந்தத் தொழிற்பேட்டையைத் திறந்து வைத்த துணைவேந்தர் புதிதாக தருவிக்கப்பட்ட மரவேலை இயந்திரத்தை இயக்கி வைத்து உரை நிகழ்த்தினார். அதைத் தொடர்ந்து இயந்திரவியலாளர் சி. தயாபரனின் சொற்பொழிவு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் விவசாய பீட பீடாதிபதி, விஞ்ஞான பீட பீடாதிபதி, பட்டப்படிப்பு பீடாதிபதி உட்பட பல பிரமுகர்களும் கலந்து கொண்டனர். (இ–ரி)

திருட்டுச் சந்தேக நபர்கள் மூவருக்கு விளக்க மறியல்

யாழ். நகரிலுள்ள இரு வர்த்தக நிலையங்களில் இலட்சம் ரூபா பெறுமதியான பொருள்களைத் திருடியதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட மூன்று சந்தேக நபர்களையும் எதிர்வரும் 6 ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதிமன்ற பதில் நீதிவான் க. கேசவன் உத்தரவிட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த ஆறுமுகம் ஜீவரட்ணம், ஜெயராசா லீலாவதி, தாசிம் நிசாம் ஆகியோரே இந்த மூவரும் ஆவர்.

யாழ். நகரிலுள்ள புடைவைக் கடை ஒன்றிலிருந்து மூன்று லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களும் அழகு சாதன நிலையம் ஒன்றிலிருந்து மூன்று லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களும் இவர்களினால் திருடப்பட்டதாக பொலீஸாரினால் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இரவு நேரம் நடமாடியதாக பெண் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 1

இரவு நேரத்தில் நடமாடியதாகக் கூறப்படும் பெண் ஒருவர் யாழ். பொலீஸாரினால் கைது செய்யப்பட்டு யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார்.

இப் பெண்ணை இம்மாதம் 9 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட மேலதிக நீதிவான் எஸ். ஏ. ஈ. ஏகநாதன் குறிப்பிட்ட பெண்ணை மேக நோய்ப் பரிசோதனைக்கு உட்படுத்தி நீதிமன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டார். (இ–5+9)

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 831 குடும்பங்களுக்கு 5,000 ரூபா

வலி. கிழக்கு, ஜூலை 1

இடம்பெயர்ந்து கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் வசிக்கும் 252 குடும்பங்களுக்கும் இப் பிரதேச செயலர் பிரிவில் நிரந்தரமாக வசிக்கும் 579 குடும்பங்களுக்குமான மீள் குடியமர்வுக் கொடுப்பனவு கிராமிய வங்கிகள் மூலம் வழங்கப்பட்டு வருவதாக பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர் தெரிவித்தார்.

இருபாலை கிழக்கு கிராம சேவையாளர் பிரிவில் இடம்பெயர்ந்த 3 குடும்பங்களுக்கும், நிரந்தரமாக வசிக்கும் 77 குடும்பங்களுக்கும்—

கோப்பாய் வடக்கு கிராம சேவையாளர் பிரிவில் 14 நிரந்தர குடும்பங்களுக்கும்.

நீர்வேலி தெற்கு கிராம சேவையாளர் பிரிவில் 132 நிரந்தர குடும்பங்களுக்கும்— இடம்பெயர்ந்த 54 குடும்பங்களுக்கும் -

சிறுப்பிட்டி கிழக்கு கிராம சேவையாளர் பிரிவில் இடம்பெயர்ந்த 31 குடும்பங்களுக்கும்—

நவக்கிரி கிராமசேவையாளர் பிரிவில் இடம்பெயர்ந்த 35 குடும்பங்களுக்கும், நிரந்தரமாக வசிக்கும் 18 குடும்பங்களுக்கும் —

புத்தூர்கிழக்கு கிராம சேவையாளர் பிரிவில் நிரந்தரமாக வசிக்கும் 17 குடும்பங்களுக்கும் —

தம்பாலை, கதிரிப்பாய் கிராமசேவையாளர் பிரிவில் நிரந்தரமாக வசிக்கும் 79 குடும்பங்களுக்கும் இடம்பெயர்ந்த 4 குடும்பங்களுக்கும் —

ஆவரங்கால் மேற்கு கிராம சேவையாளர் பிரிவில் நிரந்தரமாக வசிக்கும் 37 குடும்பங்களுக்கும், இடம்பெயர்ந்த 35 குடும்பங்களுக்கும்—

அச்செழு கிராமசேவையாளர் பிரிவில் இடம்பெயர்ந்த 30 குடும்பங்களுக்கும் நிரந்தரமாக வசிக்கும் 179 குடும்பங்களுக்கும்—

வளலாய் கிராம சேவையாளர் பிரிவில் நிரந்தரமாக வசிக்கும் 26 குடும்பங்களுக்கும்—

இக்கொடுப்பனவுகள் கிராமிய வங்கிகள் மூலம் வழங்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை—

அடுத்த கட்டமாக விரைவில் ஒரு தொகுதியினருக்கு இக்கொடுப்பனவை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக திட்டமிடல் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (ஐ-180)

பக்தர்கள் திரும்புவது தாமதம்

தென்மராட்சி, ஜூலை 1

நயினாதீவு நாகபூஷணி அம்பாள் ஆலய தேர், தீர்த்த திருவிழாக்களுக்குச் சென்று திரும்பிய தென்மராட்சிப் பகுதியைச் சேர்ந்த பக்தர்கள் பலர் பஸ்சேவைகள் இல்லாததால் யாழ்ப்பாணத்தில் தங்கி மறுநாள் வீடுகளுக்கு வந்து சேர்ந்தனர்.

769 இலக்கமார்க்கத்திற்கு பல மணிநேரம் பஸ்சேவைகள் நடத்தப்படாததால் மாலை ஆறுமணிவரை காத்திருந்துவிட்டு யாழ்ப்பாணத்தில் உள்ள தெரிந்தவர்கள் வீடுகளில் அவர்கள் தங்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

பக்தர்களின் வசதிக்காக விசேட பஸ்சேவைகளை வடபிராந்திய போக்குவரத்துச் சபையினரால் குறிகாட்டுவான் வரை நடத்திய போதிலும் யாழ்ப்பாணம் வந்து பின்னர் அங்கிருந்து தமது சொந்த இடங்களுக்குச் செல்ல பஸ்சேவைகள் கிடைக்காததால் பெருமளவு பக்தர்கள் மறுநாளே வீடு திரும்பியதைக் காண முடிந்தது. (ஐ–117)

அபிவிருத்தி உதவியாளராக 45 பட்டதாரிப் பயிலுநர்கள்

வலி. தென்மேற்கு, ஜூலை 1

வடக்கு — கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 45 பட்டதாரி பயிலுநர்கள் உள்ளூராட்சித் திணைக்களங்களில் 'அபிவிருத்தி உதவியாளர்களாக (Development Assistant) 1-07-99இல் இருந்து நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நியமனக் கடிதங்களை வடக்கு-கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் க. பரமலிங்கம் 28-06-99 அன்று மாகாண செயலாளர் அலுவலகத்தில் வைத்து வழங்கினார்.

மேற்படி 45 பேரும் வடக்கு — கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகம், நகரசபை, மாநகரசபை, உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், பிரதேச சபை ஆகிய இடங்களில் நியமிக்கப்பட்டுள்ளனர்

அவர்களின் பெயர் விவரம் வருமாறு:-

க. கனகதுரை [கொடிகாமம்], க. தயாராணி [சாவகச்சேரி], எஸ். எம். மெக்டலின் [கிளிநொச்சி], ரி. சிறிமுரளிதரன் (கோப்பாய்), வி. தர்மவாணி[கிளிநொச்சி] எஸ். ரமேஷ் [நவாலி], எம். தாரணி [கொழும்பு], எஸ். ஜெயந்தா [மூளாய்], ஆர். சுப்பிரமணியம் [வரணி], ஜெ பேரின்பநாயகி [கோப்பாய்], ஏ. கமலேஸ்வரசர்மா [யாழ்ப்பாணம்), ஆர். அறிவரசன் (ஒட்டுமடம்), க நாகவதனி (எழுதுமட்டுவாள்), எஸ். ரேணுகா [மட்டக்களப்பு), எஸ். சுகந்தினி [ஜெயபுரம்], கே. தயானந்தன் (சம்பூர்), க. ஜெயா [ஏட்டைபறிச்சான்], எம். உதயதாசன் [சின்னக்குளம்], எல்.எம்.ரி. யூலியம் [வங்காலை[, சி.எம். யேசுநேசன் [உயிலங்குளம்], ஏ.ஏ ஆறிவ் [ஏறாவூர்], எம். பாஸ்கலா தேவி [மட்டக்களப்பு], எஸ். ஞானபூங்கோதை[திருகோணமலை], எஸ். எஸ். மக்துத் [அக்கரைப்பற்று],எஸ். மனோன்மணி [களுவாஞ்சிக்குடி], க. தவராகினி [களுவாஞ்சிக்குடி], எஸ். சிவரட்ணம [களுவாஞ்சிக்குடி], சி. இன்பமோகன் (மட்டக்களப்பு), வி. நகுலநாயகி [மன்னார்], வி. ஆனந்தி [ஆரையம்பதி], ரி.தேவராஜ் [களுவாஞ்சிக்குடி], க. மகேந்திரராஜா[செட்டிபாளையம்] எஸ் ஈ. கென்றிசன் [முருங்கன்], எம்.எஸ்.சி. சகிலா [நிந்தவூர்], எஸ். கருணாகரன் [கல்முனை] ஏ.தே சாஜன் [நற்பிட்டிமுனை], எம்.எச் ஜெய்புனைசா [சம்மாந்துறை], பி.எம்.இட்சாக் [மருதமுனை], ஏ. எச். எச். ரகுமான் [மருதமுனை-3] ஐ.எச் எம். பாரூக் [மருதமுனை-3], எஸ். சுமதி [கல்லாறு], எஸ். ஐ. பார்ஸ் [மூதூர்-2], க. கலைமதி [மூதூர்], எஸ். சந்திரசேகரம் [மண்டூர்], கி. குருநாதன் [கோட்டைக்கல்லாறு].

இதேவேளை —

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பத்துப் பட்டதாரி பயிலுநர்கள் மேற்படி நியமனத்தில் வடக்கு — கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தில் நியமிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்படி 45 பட்டதாரி பயிலுநர்களுக்கும் முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி நிலையத்தில் அபிவிருத்தித் திட்டமிடலில் ஒரு மாதப் பயிற்சி வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் முகாமைத்துவ பயிற்சிகள் திணைக்களப் பணிப்பாளர் எம். ஏ. சி. மொகிடீன், பிரதம செயலாளர் ஜி. கிருஸ்ணமூர்த்தி, முகாமைத்துவப் பயிற்சிகள் பிரதான அலுவலர் ஏ.எம் அனிவ் லெப்பே ஆகியோர் கலந்து கொண்டனர்.

பாராட்டு விழா

வடமராட்சி, ஜூலை, 1

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டுப் பேரவையின் 'ஞானபண்டித சேவாசுரபி' விருதைப் பெற்ற மந்திகை அரசினர் ஆதார வைத்திய சாலைப் பொறுப்பதிகாரிக்கு எதிர்வரும் சனிக்கிழமை பாராட்டு விழா நடந்தப்படவுள்ளது.

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலை விரிவுரை மண்டபத்தில் நடைபெறும் இவ் விழாவை பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் ஏற்பாடு செய்துள்ளனர். (ஐ-109-173)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்கள் வெளியீட்டு நிகழ்வு

காலம்: 01 - 07 - 1999 வியாழக்கிழமை
இடம்: யாழ். மறைக்கல்வி நிலையம்
நேரம்: பிற்பகல் 4-30 மணி

Fr.G. Pilendran அவர்களின் ஆக்கத்தில் வெளியிடப்படும் நூல்கள்

1. Tamil Catholic Literary Tradition of Sri Lanka.
2. Letters of Holy Family Missionaries from Jaffna 1862 – 1886.
3. தமிழில் விவிலியம் நேற்றும் இன்றும்

அன்புடன் அழைக்கின்றோம்.

இயக்குநர்,
யாழ். மறைக்கல்வி நிலையம்.

(67075)

கண்ணீர் அஞ்சலி

வைத்திய கலாநிதி
பொ. சொர்ணலிங்கம்
M. B. B. S. (Cey), L. R. C .P. (Lond.), M. R. C. S. (Eng.), M. R. C. P. (U. K.)

அமரரும் கண்ணீர் சிந்த
அந்தரர் பொருமி ஏங்க
தமரெலாம் தவித்தே வாட
தங்களின் குடும்பம் சோர
உமதுயிர் நண்பர் நோக
உயிரினை நீத்தாய் ஏனோ?
நிமலனார் பாதம் ஏகி
நிம்மதி காண ஐயா!

அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அவரது பிரிவினால் வாடும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சி. கா. சிதம்பரநாதன் குடும்பம்,
(குரு போட்டோ)
சங்கரத்தை,
வட்டுக்கோட்டை. (67077)

NIRU TUITION CENTRE

Station Road, Kondavil.

A/L 2001 - வகையீடு

ஆரம்பம்: 02 – 07 – 1999 வெள்ளி 3. 30 p.m

A. பத்மநாதன்

[67085]

ரதி வாச்வேக்ஸ்

96 ஆம் ஆண்டுக்குப் பின் எம்மிடம் திருத்த வேலைகளுக்காகக் கொடுக்கப்பட்ட கடிகாரங்களை ஒரு மாத தவணைக்குள் குறித்த சிட்டையுடன் வந்து பெற்றுக் கொள்ளவும். தவறின் அதற்கு நாங்கள் பொறுப்பாளிகள் அல்லர் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ரதி வாச்வேக்ஸ்
இல. 62, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (66871)

சர்வதேச தரமுடைய

'றொக்லண்ட்' மதுபான வகைகள்

- சிலோன் அரக்
- ஓல்ட் அரக் 'அதிசக்தி'
- த்றீ ஸ்ரார் சாராயம்
- ஓல்ட்ஹெக் விஸ்கி
- லெமன் ஜின்
- றம்
- றை ஜின்
- ஓல்ட் அரக்
- ஹனபியர் பிரண்டி

நிதான விலையில்

கிடைக்குமிடம்:

வரமாஸ்

121/2, மின்சார நிலைய வீதி.
யாழ்ப்பாணம்.

தொ. பே. இல. 2989 (66949)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் [பிறைவேட்] லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 361, ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.07.1999இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

'லயன் ஏயர்' விமானத்தில் இருந்து மீட்கப்பட்ட

தடயபொருள்களை யாழ்ப்பாணத்தில் பார்வைக்கு வைக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 1

இரணைதீவுக் கடலில் கடந்த வருடம் காணாமற் போன 'லயன் ஏயர்' விமானத்தில் இருந்து மீட்கப்பட்ட தடயப் பொருள்களை யாழ்ப்பாணத்தில் பார்வைக்கு வைக்க ஏற்பாடு செய்யுமாறு மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலகத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த விமானத்தில் பயணம் செய்தவர்களின் உறவினர்கள் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர்.

இந்த விமானத்தில் பயணம் செய்தவர்கள் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் —

மன்னார், கொழும்பு ஆகிய இடங்களில் தடயப் பொருள்கள் வைக்கப்பட்டபோது போக்குவரத்துப் பிரச்சினை காரணமாக உறவினர்கள் அங்கு செல்ல முடியவில்லை என்றும் —

எனவே யாழ்ப்பாணத்தில் அவற்றை மக்கள் பார்வைக்கு வைக்க ஏற்பாடு செய்யப்பட வேண்டும் என்றும்—அவர்கள் கோரினர்.

இந்தக்கோரிக்கைகள் தமது தலைமையகத்துக்கு அனுப்பப்பட்டுள்ளன என்றும் — மன்னார் நீதிமன்றத்தில் ரிட் மனு ஒன்றைத் தாக்கல் செய்வதன் மூலமே அவற்றை இங்கு எடுத்துவர முடியும் என்றும் — மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். இணைப்பதிகாரி எஸ். சிறீதரன் தெரிவித்தார். (3-5-9)

தமிழர் ...

(முதலாம் பக்கத் தொடர்)

கல்வி அமைச்சருடன் பேச்சு நடத்த ஏற்பாடு செய்து தரப்படும் என்று அமைச்சின் மேலதிக செயலாளர் உறுதி மொழி அளித்துள்ளார் என்று மகாசிவம் மேலும் தெரிவித்தார்.

இதன் காரணமாக எமது போராட்டத்தை இரு வாரங்களுக்கு ஒத்திவைத்துள்ளோம் என்றும் அவர் கூறினார்.

புளொட்...

(முதலாம் பக்கத் தொடர்)

வேட்டுக்களைத் தீர்த்தனர்.

அங்கு கடமையில் இருந்த பேரின்பராஜா என்ற றிசேர்வ் பொலீஸ் கான்ஸ்டபிளும், சிறிசேன என்ற ஊர்காவலரும் உயிரிழந்தனர்.

கொழும்பில் தங்கியுள்ள பாலச்சந்திரன் நேற்று வவுனியாவுக்கு வந்து, கொழும்புக்குத் திரும்பிய சில மணி நேரத்திலேயே இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

வீட்டில் இருந்த அவரது உறவினர்கள் வீட்டின் பின்புறமாக ஓடித் தப்பிக் கொண்டனர்.

இந்தச் சம்பவத்தை அடுத்து அங்கு பதற்றம் நிலவியது.

பொது...

(முதலாம் பக்கத் தொடர்)

ளுமன்ற உறுப்பினர்கள் இந்த வாரத்தில் பங்குபற்றவிருந்த பொது வைபவங்களை ரத்துச் செய்வதாக அந்த வைபவங்களை ஏற்பாடு செய்தவர்களுக்கு அறிவித்துள்ளனர்.

விடுதலைப் புலிகளிடம் இருந்து எழுத்து மூலமான தகவல் கிடைக்கவில்லை என்றும்—

அவர்களின் இந்த முடிவு உறுதி செய்யப்பட்டுள்ளது என்றும்— நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

மாவட்ட அபிவிருத்திக் கூட்டங்களில் பங்குபற்றவும்—

திணைக்களத் தலைவர்களைச் சந்திக்கவும்— தடை விதிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது,

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் மூவரும், முஸ்லிம் காங்கிரஸ், ஐ. தே. க. ஆகியவற்றின் சார்பில் தலா ஒருவரும் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்றனர். (இ-3-21)

மருத்துவர்...

(முதலாம் பக்கத் தொடர்)

னர் அரச மருத்துவர்கள் தமது போராட்டத்தைக் கைவிட்டு வேலைக்கு திரும்ப வேண்டும் என்று ஜனாதிபதி நிபந்தனையும் விதித்துள்ளார்.

ஜனாதிபதியின் கடிதத்தை அடுத்து அரச மருத்துவர்கள் நேற்று மாலை கூடி ஆராய்ந்தனர் என்றும் —

அங்கு எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்துத்தகவல் வெளியாகவில்லை என்றும்— கூறப்பட்டது. (இ-3-6)

ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 1

வலிகாமம் வலய கல்வித் திணைக்களத்தினால் நாளை 2 ஆம் திகதியும் மறுநாள் 3 ஆம் திகதியும் நடத்தப்படவிருந்த வலிகாமம் கல்வி வலய மட்ட ஆங்கில தினப் போட்டிகள் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளன,

மேற்படி போட்டிகள் யாவும் 16 ஆம் 17 ஆம் திகதிகளில் நடத்தப்படுமென வலிகாமம் வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (இ-9)

இராணுவக்...

(முதலாம் பக்கத் தொடர்)

தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பில் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுப் பிரதிநிதி செரிக் பொலவியும் பங்குபற்றினார்.

படையினர் குறிப்பிட்ட மூன்று பாதைகளில் எந்தப் பாதையைத் திறக்கலாம் என்பது தொடர்பாக வவுனியா அரச அதிபரும், செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு பிரதிநிதியும் விடுதலைப் புலிகளுடன் பேசவிருக்கின்றனர்.

விடத்தல்தீவில்...

(முதலாம் பக்கத் தொடர்)

ஷெல் தாக்குதல் மற்றும் உணவு, குடிதண்ணீர் தட்டுப்பாடு காரணமாக அங்கிருந்து புறப்பட்டதாகவும்—

பலர் வள்ளங்களில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் சென்றுள்ளனர் என்றும் — அகதிகள் தெரிவித்தனர்.

விடத்தல்தீவில் வீழ்ந்த ஷெல்லுக்கு சிறுவன் ஒருவனும் இரு பெண்களும் உயிரிழந்தனர் என்றும் அவர்கள் கூறினர்.

அதேநேரம் — வள்ளங்கள் மூலம் வந்தவர்களில் ஐந்து இளைஞர்கள் சந்தேகத்தின் பேரில் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (இ-164-3)

NEW SCIENCE COLLEGE

JAFFNA.

இணைந்த கணிதம்

A/L – 2000 நிகழ்தகவு

ஆரம்பம்: 03 – 07 – 1999 [சனி 7.30 A.M.]

A/L – 2001 பொதுத்தீர்வு

ஆரம்பம்: 03 - 07 – 1999 [சனி 11. 30 A.M]

ஆசிரியர்: A. பத்மநாதன்.

[67057]

மரண அறிவித்தல்

திருமதி றோஸ் ராஜேஸ்வரி பெனடிக்ற்

அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் 14, புதுவீதி கொய்யாத்தோட்டத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி றோஸ் ராஜேஸ்வரி பெனடிக்ற் 30- 06- 99 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற A. E. J. பெனடிக்ற் (பிரதம தபால் அதிபர்–யாழ்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற மனோகரன், றதி, அலோஷியஸ் (பிரான்ஸ்), ஜெராட் (கனடா), நிகாஸ் (பிரான்ஸ்), மல்லிகா, ராதா (கனடா), ராஜீவ் [லண்டன்], ஜீவன் [பிரான்ஸ்], லக்கி (லண்டன்), சுமதி (மலேசியா), சஞ்ஜே (யா/புனித சாள்ஸ் ம.வி.), ஷோபனா [V. அரியரட்ணம் & கோ] ஆகியோரின் அன்புத் தாயாரும் லூஷியா, காலஞ்சென்ற மாசிலாமணி, பரமேஸ், யூஜீனீ, நிர்மலன், மதுரநாயகம், றற்றிக், ஜெறின் [யா/ஊர்காவற்றுறை மரியாள் வித்தி], ஸ்ரீஸ் காந்தன் ஆகியோரின் மாமியாரும், ராசா, ராணி, ஜெறி, றஜீவ், லீனா, பியோனா, துஷி, ஜெரோம், கோபி, அபர்ணா, கிறிஸ்தோப்பர், திமோத்தி, பிங்கி, மதுஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று(01-07-99) வியாழக்கிழமை பிற்பகல் 3-00மணியளவில் கொய்யாத்தோட்டம் கிறீஸ்து அரசர் ஆலயத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காகப் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
R. சஞ்ஜே பெனடிக்ற்
(மகன்)
இல. 14, புதுவீதி,
கொய்யாத்தோட்டம். (சி/8063)

எமது புதிய வீடியோ வெளியீடு!

சரத்குமாரின்

★ ஒருவன்

அடுத்தCDவெளியீடு

★ நெஞ்சினிலே

★ புதிய போஸ்ரர்களும் விற்பனைக்கு உண்டு.

வீடியோ விமல்
யாழ்ப்பாணம்.
(சி/8062)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org